Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சாறிகள், பட்டு வேட்டிகள்,
கூறை சாறிகள் மற்றும்
ரெடிமேட் ஆடைகள், பல்வேறு
துணி வகைகள், பிளவுஸ்
துணி வகைகள் யாவற்றுக்கும்
வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-2014)

T.P NO:
222 2063

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 27 (20.01.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:111

## ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அரசியல் குற்றப் பிரேரணை ஒன்றை நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யவிருப்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

மூன்று முக்கிய அமைச்சுக் பொறுப்புக் களை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத் திடமிருந்து ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற் றதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களி டம், அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு ஆதரவாகக் கையெழுத்துப் பெறும் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தன்வசம் உள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு, எதிர் காலத்தில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்துவருவதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, அரசாங்கத்தின் இந்த முயற் சிக்கு முக்கிய அமைச்சர்கள் சிலர் எதிர்ப்புத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்; திட்ட அறிக்கை ஜனாதிபதியிடம்!

(கொழும்பு)

இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பான விடயங்கள் குறித்து - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையிலான குழுவினர் புதுடெல்கியில் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்த அறிக்கை நேற்று ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்டது.

புதுடெல்கியில் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்து கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத், இரு நாடுகளுக்குமிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத் துவதில் இந்தியா மிகுந்த ஆர்வமாக உள்ளது. இதற்கான வரைபுகள் முடிவுசெய்யப்பட்டு மிக விரைவில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

இந்த உடன்படிக்கை தொடர்பாக இலங்கை - இந்திய அரசாங்கங்கள்தான் இறுதி முடிவினை எடுக்கும். இருந்தபோதிலும், அடுத்த மாத முடிவுக்குள் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிடும்.

அடுத்தமாத முடிவுக்குள் கைச்சாத்திடப்படவுள்ள இந்த உடன்படிக்கை தொடர்பாக தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவது எனவும், இந்தியாவில் நடந்த மூன்று நாள் பேச்சுக்களின் பின்னர் இருநாட்டு பாதுகாப்பு அதிகாரிகளாலும் முடிவுவெடுக்கப்பட்டது.

இதேவேளை, இந்தக் குழுவில் சென்ற இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல தெரிவிக்கையில்,

இந்த விஜயத்தின்போது - இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுடன் இரு நாடுகளுக்கு மிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரிப்பு தொடர்பாக மிகவும் விரிவான முறையில் நீண்டநேரம் ஆராயப்பட்டது.

இதேவேளை, பலாலி விமான ஓடுபாதைத் தளத்தை இந்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி – பிரதமர் இன்று சந்தித்து பேச்சு!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி சந்தரிகா குமாரதுங்கவுக்கும் இடை யிலான முறுகல்நிலைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை ஒன்று இன்று நடைபெறவுள்ளது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்தப் பேச்சுக்களில் பிரதமரின் செயலா ளர் பிரட்மன் வீரக்கோன், ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோதித்த வெல ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை யில் விடுதலைப் புலிகளுடனான சமாதான முன்னெடுப்பை மேற்கொள்வது, நாட்டின் அபி விருத்தி ஆகியன தொடர்பாக, இரு தரப்பினருக் கும் இடையில் இணக்கமொன்றை ஏற்படுத் தும் வகையில் அமையுமெனத் தெரிவிக்கப்படு கிறது.

மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனா திபதி பொறுப்பேற்றதைத் தொடர்ந்து பிரத மருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அரசியல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய கிளிநொச்சி சந்திப்பில்

# தமிழ்மக்களின் இன்றைய அவலநிலை குறித்து

# உதவி வழங்கும் நாடுகளிடம் புலிகள் விபரிப்பு!

(கிளிநொச்சி)

**இரண்டு தசாப்தகாலப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அவலவாழ்க்கை நிலையைத் தெளிவுபடுத்துவதற் காக - சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் நேற்றுச் சந்தித்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பை நடத்தினர்.**

மாமனிதர் துரைராசா நினைவாக அமைக் கப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் திட்டமி டல் பணியகத்திலேயே இந்த மாநாடு நடை பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர் செல்வின் இமானியல், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் ஆரம் பித்த பேச்சுக்கள் - சுமார் இரண்டு மணிநேர மாக - பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெற்றது.

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவி டப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள், ஜப்பான், நோர்வே, நெதர்லாந்து, சுவிற்சலாந்து போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்ற னர். முப்பதுக்கும் மேற்பட்ட சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற் றினர்.



## இந்திய மீனவர்களுக்கு கடற்படை பாதுகாப்பு!

(வடமராட்சி)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக் கும் இந்திய மீனவருக்கு இந்திய கடற்படை யினர் பாதுகாப்பு அளிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு வடமராட்சி கடற் பரப்பினுள் அத்துமீறி நுழைந்த நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள், மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தன. இவ்வாறு மீன்பிடித்தலில் ஈடுபட்ட இந்திய இழுவைப் படகுகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இந்திய கடற்படையின் ரோந்துப் படகுகள் அப் பகுதியில் தொடர்ந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதாக உள்ளூர் மீனவர்கள் தெரி வித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சிக்கு இடையே இன்று கூட்டு உடன்படிக்கை கைச்சாத்து!

### அரச தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி ஆகியவற்றுக் கிடையேயான கூட்டு ஒப்பந்தம் இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது.

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செய லாளர் மைத்திரிபால சிறிசேனவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகாவும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமர சிங்கவும் கலந்துகொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச இன்று ஒப்பந்த கைச்சாத்திடல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக லண்டனிலிருந்து வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறவுள்ள ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்வை அரசாங்க தொலைக் காட்சியில் நேரடியாக ஒளிபரப்புச்செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

## 51 ஆவது டிவிசன் தளபதியாக பிரிகேடியர் சரத் கருணாரட்ண!

(கொழும்பு)

இராணுவப் பேச்சாளராக முன்னர் பணியாற் றிய பிரிகேடியர் சரத் கருணாரட்ண, யாழ்ப்பாணத் தில் நிலைகொண்டுள்ள 51 ஆவது டிவிசனின் பொதுக்கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட் டிருக்கிறார்.

அமெரிக்க இராணுவத்தின் ஏற்பாட்டில் ஹவாயில் நடந்த இராணுவ கற்கைத் திட்டம் ஒன்றுக்காகச் சென்றிருந்த பிரிகேடியர் சரத் கருணாரட்ண தற்போது நாடு திரும்பியிருக் கிறார்.

இவர் ஏற்கனவே மேஜர் ஜெனரல் லறி விஜயரட்ணவின் மரணத்தின் பின்னர் பருத் தித்துறையில் நிலைகொண்டுள்ள 524 ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக பணியாற்றி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
(சி-2009) email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர் விபரம்!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2004 ஆம் ஆண்டு முதல் கல்வியைத் தொடர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு:

**ஆரம்பக்கல்வி**

யசோதா தங்கத்துரை (யாக்கரு), பாக்கியநாதன் ராஜ்குமார் (நீர்வேலி தெற்கு), வேலும் மயிலும் சுவர்ணா (சமரபாகு), இராசதுரை இதயராஸ் (சில்லாலை மேற்கு), பத்மநாதன் பத்மினி (புலோலி தெற்கு), ஹரீந்திரன் தயாளினி (உயரப்புலம்), மைதிலி மணியம் (நீர்வேலி தெற்கு), செல்லத்துரை சகீலா (நீர்வேலி தெற்கு)

தில்லைநாதன் வாசுகி (புலோலி), ஜேசுதாசன் றொக்சினி (ஆனைக்கோட்டை) கிருஷ்ணன் கிடுகன்சி (யாழ்ப்பாணம்), யோகதாஸ் கார்த்திகா (வவுனியா), தங்கவேலாயுதம் பிரியதர்சினி (பருத்தித்துறை), கனகநாயகம் பவதாரிணி (இணுவில் மேற்கு),

ரகுநாதன் தயாளினி (ஆனைப்பந்தி), தயானந்தி பொன்னுத்துரை (சங்கானை), சிதம்பரநாதன் மாலதி (கரவெட்டி கிழக்கு), தர்சிகா லோகேந்திரன் (இணுவில் கிழக்கு), துரைராஜா துஷ்யந்தினி (கரவெட்டி தெற்கு), மனோகரன் சயீலா (நுணாவில்), சிவராஜா சிவரஞ்சினி (கொடிகாமம்)

சொக்கலிங்கம் பிரதீபா (கரவெட்டி கிழக்கு), கந்தசாமி செல்வானந்தி (உடுவில் தெற்கு), ஆனந்தவேல் வதனி (தொண்டமானாறு), திருச்செல்வம் காயிஸ்திரி (நீர்வேலி தெற்கு), இராஜேஸ்வரன் தேவதர்சினி (மாமுனை), ராஜினி கைலாயநாதன் (கட்டுடை), வாசுகி தில்லையம்பலம் (குப்பிளான் தெற்கு), கந்தசாமி மேகலா (நயினாதீவு), மகேசன் வனஜா (தும்பளை தெற்கு)

**விசேட கல்வித்துறை**

யோகராஜா துஷ்யந்தன் (ஒட்டுசுட்டான்), மகேந்திரன் குபேந்தினி (கொடிகாமம்), கனகரட்ணம் கெளசிகா (கொழும்புத்துறை), தர்மலிங்கம் தாசன் (பண்டத்தரிப்பு), பரமேஸ்வரன் சுரேஷ் (பருத்தித்துறை), சிவபாதலிங்கம் சிவாகரன் (இணுவில் கிழக்கு), முகமட் லபீர் முகமட் ரியாஸ் (மூதூர்)

இராசையா நந்தகுமாரன் (ஊரெழு மேற்கு), முகமட் நகீர் மொகமட் நுபான் (பண்டாரகம), பாலசுப்பிரமணியம் பார்த்தீபன் (வரணி), பஞ்சராஜா சுரேந்திரன் (திருநெல்வேலி), தெய்வேந்திரம் மணிவண்ணன் (இளவாலை)

கந்தசாமி சதீஸ் (சர்சாலை வடக்கு), முகமட் இப்ராகிம் முகமட் மன்பூஸ் (அட்டாளைச்சேனை), சிவராஜசிங்கம் ஜனார்த்தனன் (தம்பலகாமம்)

**சங்கீதம்**

பேரின்பராஜா ஜசீதா (தாளையடி), வினாயகமூர்த்தி தாட்சாயினி (கொழும்பு-12), இராமநாதன் மனோதாரிணி (கம்பர்மலை), மனோகரன் சோபனா (நல்லூர்), காசிநாதன் சுகாசினி (புதுக்குடியிருப்பு), வில்வரத்தினம் ஊர்மிளா (ஈச்சமோட்டை), சிறிசபேசசர்மா சுமித்திரா (இணுவில் கிழக்கு), தவராசா கமலதாசன் (புதுக்குடியிருப்பு), இராசரத்தினம் பிருந்தா (அம்பன்), ஜெயபாமினி கிருஷ்ணசாமி (இமையாணன்), சண்முகசுந்தரன் பத்மரோஷினி (சிலாபம்), நவரட்ணராஜா சீதாஜினி (கொடிகாமம்), இராசேந்திரம் ராஜி (அளவெட்டி), மதனசுந்தரம் அருந்ததி (சிலாபம்), நேசரட்ணம் அன்பரசி (நாகர்கோவில்), சபாரட்ணம் அனுசலா (பண்டத்தரிப்பு), அனுஷா நவரட்ணம் (இமையாணன்), கனகரத்தினம் ஜெயந்தினி (மிருசுவில்), ஆறுமுகநாதன் லக்ஷிதா (அளம்பில்).

**நடனம்**

வீரரட்ணம் சந்திரமோகன் (மயிலிட்டி வடக்கு), சோபனா ரட்ணசிங்கம் (சங்கானை), கார்த்திகா சிவபுண்ணியம் (சாவகச்சேரி), ஜோன் எட்வேட் மேரி மேகலா (பருத்தித்துறை), செல்வநாயகம் லவதுஷா (கந்தர் மடம்), நித்தியநாதன் கார்த்திகா (இணுவில் மேற்கு), சகீதா தங்கராஜா (முள்ளியவளை), இராசையா ரேணுகா (கோண்டாவில் கிழக்கு), ஜனார்த்தா பூவிலிங்கம் (அச்சுவேலி வடக்கு), ஜெயரட்ணம் ஜெயந்தா (தம்பிலுவில்), தர்மலிங்கம் கஜேந்தினி (இளவாலை), ராகவன் விஜிதா (திருமலை), இராசையா உதயசாந்தி (திருமலை), செல்லத்துரை கமலினி (பூநகரி), தம்பிராஜா புஸ் பலீலா (அச்செழு வடக்கு), இராசையா அருள்வதனா (ஏழாலை தெற்கு), ஜெகநாதன் நிரோஜா (ஆனைக்கோட்டை), குணரட்ணம் ரஜீதா (மாவிட்டபுரம்), கனகரட்ணம் ஜெகரதி (ஒட்டுசுட்டான்), சுந்தரம் தேவதர்சினி (அக்கரைப்பற்று).

**சித்திரம்**

பாலசுந்தரமூர்த்தி அரவிந்தன் (இணுவில் கிழக்கு), எஸ்.நிர்மலவாசன் (செங்கலடி), எஸ்.ஜெயசுதாஜவன (அராலி வடக்கு), ஏ.அருட்குமரன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), எம்.றொஷானி (முருங்கன்), சி. கஜேந்தினி (புன்னாலைக் கட்டுவன் தெற்கு), ரி.சுரேஷ்குமார் (வல்வெட்டித்துறை), எஸ்.விஜிதன் (அராலி மேற்கு), கே. சாரதாதேவி (தெமோதர), எஸ். தினேஷ்குமார் (சுழிபுரம்).

சிவசுப்பிரமணியக்குரு சிவானந்தராசா (கிளிநொச்சி), ஜெகநாதன் ஜெகரூபன் (புதுக்குடியிருப்பு), கணேசரட்ணம் சசிகாந்தமூர்த்தி (இணுவில் மேற்கு), தவராசா கபேசன் (இணுவில் தெற்கு), ரி.உமாகாந்தன் (கோபபாய் தெற்கு), ஆர்.வசீகரன் (நவாலி தெற்கு), ரி.கண்ணன் (குருக்கள் மடம்), கே.மதன்ராஜ் (செட்டிக்குளம்), எஸ்.சிறிதர்சன் (கோண்டாவில்), எஸ். நேசராசா (அக்கரைப்பற்று),

**நாடகம்**

கோபாலகிருஷ்ணன் மதனகோபால் (யாழ்ப்பாணம்), துரைசிங்கம் இந்திரஜித் (கந்தரோடை), அல்போன்ஸ் எலிசபேத் (அக்கரைப்பற்று), இராமசாமி அல்கேஸ்வரி (மகாறம்பைக்குளம்), முருகையா சுஜிதா (மல்லாகம்), கிருஷ்ணன் கிஜோஜினி (ஊரெழு மேற்கு), செல்வநாயகம் சியாமளா (பண்டத்தரிப்பு), குகானந்தன் வசிகுலன் (யாழ்ப்பாணம்), மனுவல் விஜய நிர்மலா (புத்தளம்), ஜெகதேவன் சசிகலா (நோர்வூட்), ஆனந்தராசா சுகுணா (காங்கேசன் துறை), கனகரட்ணம் கிருஷ்ணவேணி (கொக் கட்டிச்சோலை), ஜானகி ஆனந்தராசா (வவுனியா), குணசிங்கம் லெனின்குமார் (நல்லூர்), மரியசேகர் நியோமி கார்த்திகா (இருதயபுரம்), பூபாலசிங்கம் துஷிதா (ஏழாலை), அரியநாயகம் அஜந்தமாலா (ஏழாலை), அன்ரனி லூசியா (கருவேப்பங்கேணி), ஜெயராசா ஜெயரூபதி (முள்ளியவளை), கணபதிப்பிள்ளை பரமசிவம் (காரைதீவு-3)

(மிகுதி நாளை தொடரும்......)


ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-2005)

திறைஞ்சனல்ஸ் சங்கானை

அஜித், கார்த்திக், ரோஜா நடித்த

உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

TOMP RAIDER II

(சி-2004)


# எழுது கருவிகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டு பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 350 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள் என்பன வழங்கப்பட்டது.

யாழ்.வர்த்தக சமூகத்தின் உதவியுடன் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

# இளைஞர் கழகத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்திற்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. தலைவராக ந. யோகரூபனும், செயலாளராக பா. ஐங்கரனும், பொருளாளராக சோ. சந்திரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண்டுப்பொதுக்கூட்டத்தின் போதே இந்த நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்புடன் இணைந்து, இளைஞர் கழகம் இலவச கணினி வகுப்புக்களையும், உடுவில் பிரதேச செயலக அனுசரணையோடு இலவச ஆங்கில வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இலவச ஆங்கில வகுப்பின் முதற் தொகுதி மாணவர்களுக்கான பரீட்சைகள், அடுத்தவாரம் நடைபெறவுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# நல்லூர் பிரதேச செயலர்பிரிவில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு

## பிரதேச செயலர் தெரிவிப்பு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 29 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 368 பேருக்கு மீள் குடியமர்வுக்கான 25 ஆயிரம் ரூபா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக- நல்லூர் பிரதேச செயலர் திருமதி. எஸ்.தெயவேந்திரம் தெரிவித்துளளார்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை தமக்குரிய கிராம சேவையாளர் அலுவலகங்களில் பார்வையிடமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களின் மூலம் இந்த மீள்குடியமர்வுக்கான தொகையைப் பெறவுள்ளோர்களின் பெயர்களை உறுதிப்படுத்துவதற்கான பயனாளிகளின் ஒப்பம் பெறும் நிகழ்வானது எதிர்வரும் 25ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

ஜே/95,ஜே/96, ஜே/94 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகள் காலை 9 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்திலும், ஜே/107, ஜே/109 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகள் காலை 9.30 மணிக்கு ஜே/109 கிராம சேவையாளர் அலுவலகத்திலும், ஜே/103, ஜே/104, ஜே/106 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு காலை 10 மணிக்கு ஜே/103 கிராம சேவையாளர் பிரிவிலும், ஜே/100, ஜே/97, ஜே/98, ஜே/101, முதலிய கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பயனாளிகள் காலை 10.30மணிக்கு ஜே/100, கிராம சேவையாளர் அலுவலகத்திலும், ஜே/101, ஜே/110, ஜே/111, ஜே/113, ஜே/114 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு காலை 11 மணிக்கு ஜே/114 கிராம சேவையாளர் அலுவலகத்திலும்,

ஜே/128, ஜே/99 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பயனாளிக்கு காலை 11.30 மணியளவில் ஜே/99 கிராம சேவையாளர் அலுவலகத்திலும், ஜே/124, ஜே/125 ஆகிய கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு மதியம் 12மணிக்கு ஜே/125 கிராம சேவையாளர் அலுவலத்திலும்,

ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120 ஆகிய கிராம சேவையாளர்க பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு மதியம் 12.30மணிக்கு அரசடி சனசமூக நிலையத்திலும், ஜே/115, ஜே/116 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குடபட்ட பயனாளிகளுக்கு மதியம் 1 மணியளவில் ஜே/115 கிராம சேவையாளர் அலுவலகத்திலும் ஜே/121, ஜே/123, ஜே/126 ஆகிய கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பயனாளிகளுக்கு பிற்பகல் 1.30 மணியளவில் ஜே/123 கிராம சேவையாளர் அலுவலத்திலும், ஒப்பம் பெறும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும் பயனாளிகள் அத்தினத்தில் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு சமுகமளிக்குமாறும் நல்லூர் பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

TATA - 450 சிவப்பு நிற CANDER 15,000 Km ஓடிய நிலை இல. 011-WP-HK 2797 பினான்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 265/1/2 புளுமண்டல் வீதி கொழும்பு - 13. T.P: 011-2385530, 0777-666704. (593)

16", 14", 12, 10" தச்சு வேலை செய்யும் சீனா மெசின்கள், டிசைன் சீவும் ரஷட்டர்கள், சான் பேப்பர், கிறைண்டர்கள், எலெக்றிக் றில்லர்கள், அங்கிள் கட்டிங் மெசின், வளைவு வெட்டும் ஜிக்சோ, தூசு அடிக்கும் வூலோவர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுதாகரன், 20, 2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி/2159)

### தேவை

ஸ்ரூடியோ வேலை பழக ஆர்வமுள்ள 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை. யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 31.01.2004 இற்கு முன் விண்ணப்பிக்கவும். வேலை பழகும் போது, ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். விளம்பர இல. 21 மே/பா நமது ஈழநாடு இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/2153)

### மணமகள் தேவை

பிரான்சில் வசிக்கும் 35 வயது நிரம்பிய சதய நட்சத்திரமும் உதயத்து செவ்வாய் கொண்ட மணமகனுக்கு பெற்றோர் மணமகளை தேடுகிறார்கள். மணமகள் வெளிநாட்டில் இருப்பது விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.22 மே/பா நமது ஈழநாடு இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/2154)

பார்வையில் பழுதுண்டா பயம் எதற்கு?
பற்களில் பழுதுண்டா? விழுந்து விட்டனவா? பொங்கிடும் பார்வையை பெற்றிடவும், முன்பைவிட அழகான, உறுதியான வெண் சங்குப்பற்களை கட்டிடவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களை பொருத்திட யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்.
(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.)
564, 566 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P 222 2486

கிளைகள்:

பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல.80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

இல.91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.
T.P 222 5233

வீடு விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோவிலுக்கு முன்பாக 4 பரப்புக் காணியில் 3500 சதுர அடி கொண்ட பெரிய வீடும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
வதனா களஞ்சியம் (செந்தில் கடை)
நந்தாவில் அம்மன் கோவில் முன்பாக (சி/2163)

O/L... இன் பின் அடுத்தது என்ன?

விடுமுறையை வீணாக கழிக்காதீர்
சரளமான ஆங்கில அறிவுடன் Diploma சான்றிதழ் ஒன்றும்

இலவச தபால் மூலம் ஆங்கில பாடநெறியை தொடருங்கள்

இலவசம் பின்வருவன இலவசம்



அழகிய டீ.சேர்ட் ஒன்றுடன்
2004ம் ஆண்டுக்கான (Diary) தினக்குறிப்பேடு
ஒன்று அடையாள அட்டை (Identity Card)

Diary




(569)

பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 4/50 பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

The ENGLISH LANGUAGE INSTITUTE
P.O.BOX 083 Kandy
Tel: 0777-802849

# நீண்டகாலப் பிரச்சினைக்கு உடன் தீர்வுகாண முடியாது!

## அலவி மௌலானா பி.பி.ஸிக்குப் பேட்டி

(கொழும்பு)

நாட்டிலுள்ள நீண்டகாலப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணலாம் என நான் நினைக்கவில்லை. கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்றுவரும் பிரச்சினைக்குச் சரியானமுறையில் பரிகாரம் கண்டிருந்தால், அது இந்த நிலைக்கு வந்திருக்காது.

இவ்வாறு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலவி மௌலானா தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளால் முன்வைககப்பட்ட தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதி கலந்தாலோசித்தது ஒரு மாற்றத்திற்காகும். இந்தப் பிரச்சினை நீண்டு செல்வதில் ஜனாதிபதியோ, மக்களோ விரும்பவில்லை. மக்களுக்குத் தேவை சமாதானம். எனவேதான், விடுதலைப் புலிகள் முன்வைத்த திட்டவரைபில் எந்தளவு முடிவிற்கு வரலாம் என்ற நிலையில் - ஜனாதிபதி அது தொடர்பாக ஆராய்ந்தார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்த திட்டவரைபை, ஜனாதிபதி பரந்த மனப்பான்மையுடனேயே ஆராய்ந்தார். இதன்மூலம் விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையை உருவாக்குவதற்கு, அதற்குள்ள சூழ்நிலைகளை ஏற்படுத்தக் கூடியநிலையில் ஜனாதிபதி திறந்த மனப்பான்மையுடன் உள்ளார். அதற்காக எல்லாக் கட்சிகளும் சேர்ந்து உதவியாக இருக்கவேண்டுமென்பது எல்லோரதும் கருத்தாகும். ஆகவே இந்த சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

ஜே.வி.பியினரும் இந்த நாட்டிலுள்ள பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் ஒத்துழைப்பு கணடிப்பாகத் தேவை என்பது எமது கருத்து.

இது தொடர்பாக அண்மையில் பாகிஸ்தானில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளச்சென்ற ஜனாதிபதி சந்திரிகா - இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் கலந்தாலோசித்திருப்பார் எனவும் நான் கருதுகின்றேன் எனத் தெரிவித்தார்.

# தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச முடிவு

வடக்கு - கிழக்கு தனியார் பஸ் போக்குவரத்து சேவையை விஸ்தாக்கும் நோக்குடன், இராணுவம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தமது தலைமையில் குழுவொன்று செல்லவுள்ளதாக, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து நகர்ப்புற, கிராமப்புறங்களிலும் தனியார் பஸ்சேவையை நடத்துவதற்குப் போதுமான பஸ் வண்டிகளை வெளிநாட்டு உதவியுடன் பெற்றுக்கொள்வது குறித்தும் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனவுடன் பேச்சு நடத்தப்பட்டதாகவும், இது குறித்த கடிதம் ஒன்றையும் அமைச்சரிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் - குறிப்பாக, குடாநாட்டுக்குள் மேலதிகமாகத் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக- புலிகள், இராணுவம் இருதரப்புடனும் பேச்சு நடத்துவது தமது நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

# சமாதானத்தின் வேகம் குறையாதிருப்பதற்கு அனைத்து நடவடிக்கையும் எடுத்துள்ளேன்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



சமாதான முயற்சிகளின் வேகம் மேலும் குறைந்துவிடாமல் இருப்பதற்கு, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கெட்டிபொலவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதான முயற்சிகளில் மக்கள் இழந்த நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவேண்டியது, சமாதான செயற்பாடுகளின் பிரதான தேவையாகும். அரசாங்கத்தைக் கவிழ்க்க நினைத்து, எம்மிடம் மூன்று அமைச்சுக்கள் பறிக்கப்பட்டன. பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்களுள் இரண்டு சமாதான ஒப்பந்தத்துக்கு முக்கியமானது. அவை இல்லாது போர் நிறுத்தத்தை அமுல்படுத்தமுடியாது. பேச்சுவார்த்தைகள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு நெருக்கடியொன்றினைத் தோற்றுவிப்பதற்கே மூன்று அமைச்சுக்களும் பொறுப்பேற்கப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜே.வி.பியுடனான உடன்படிக்கை நெடுந்தூரப் பயணத்தின் ஆரம்பம்

## அனுரா கூறுகிறார்



சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பியுடன் செய்துகொள்ள இருக்கும் கூட்டு உடன்படிக்கை, நெடுந்தூர அரசியல் பயணத்துக்கு ஆரம்பமாக இருக்குமென்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் முன்னேற்றப்பாதையில் இது தீர்க்கமான மைல்கல்லாக இருக்கும். இந்தக் கூட்டுச் சேர்வதால், கடந்த பத்து ஆண்டுகளில் அடையப்படாத பல நோக்கங்கள் சாத்தியப்பட்டு விடும் என்று தமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

இன்று கைச்சாத்திடப்படவிருக்கும் இந்த ஒப்பந்தம் - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், உரியநேரத்தில் ஜனாதிபதி சிந்தித்து தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும் அநுரா பண்டாரநாயக்க மேலும் குறிப்பிட்டார். ஆயினும், இந்த ஒப்பந்தம் நாட்டின் பிரதேச கௌரவம், சமாதானம், நீதி ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கவேண்டும் எனவும், இந்தக் குறிக்கோள்களிலிருந்து விலகிச்செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார். (01)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டை!

## ஜனாதிபதி, பிரதமருக்கு அனுப்பப்படும்

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரி, பொதுமக்களிடம் கையொப்பங்களைப் பெற்று ஜனாதிபதி, பிரதமர், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை - மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் மேற்கொண்டுள்ளது.

பொது மக்களிடம் கையொப்பம் பெறும் பணி நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த, மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் செயலாளர் என்.கந்தசாமியின் தலைமையில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி, ஞா.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கையொப்பங்களை இட்டு இதனை ஆரம்பித்து வைத்தனர். சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பெருந்தொகையான பொது மக்களும் இந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

1979 ஆம் ஆண்டு ஜுலை 19 ஆம் திகதி - ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அப்போது நீதி அமைச்சராகவிருந்த கே. டபிள்யூ. தேவநாயகத்தால் நாடாளுமன்றத்தில் கொணடுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட இந்தத் தற்காலிகச் சட்டம் - கடந்த இருபத்தைந்து வருடங்களாக அமுலிலிருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இநதச் சட்டத்தின்கீழ் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான பொது மக்கள் நீதி விசாரணையின்றி, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் - குற்றம் ஏதுவும் செய்யாதவர்கள், இந்தச் சட்டத்தின்கீழ் தண்டனை பெற்றிருக்கிறார்கள். உலகத்திலேயே மிகக் கொடூரமான இந்தச சட்டத்தை நீக்கவேண்டும். இந்தச் சட்டத்தை தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# பாம்பன் பாலத்தடியில் இரு இலங்கையர் கைது

ஒரு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன், இரண்டு இலங்கையர்கள் இந்தியாவின் பாம்பன் பாலம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தென்னிந்தியக் கடலோரக்காவற்படையினர் தெரிவித்தனர். இலங்கைக்கு கடத்துவதற்குத் தயாராக இருந்தபோதே, இந்த போதைப் பொருட்களுடன் இலங்கையரும் கைது செய்யப்பட்டனர். அண்மைக் காலமாக பாம்பன் பாலத்தினூடாக இலங்கைக்குப் போதைப்பொருள் கடத்தப்படுவதாக, தென்னிந்திய கடலோர காவற்படைக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### நூல் அறிமுக விழா

மாலதி படையணியின் வெளியீடான 'விழுதுமாகி வேருமாகி' நூல் அறிமுகவிழா - நேற்றுமுன்தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.கப்டன் வானதி வெளியீட்டகத்தின் பொறுப்பாளர் உலகமங்கை தலைமையில் நேற்றுமுன்தினம் பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில், பொதுச்சுடரினை மாவீர்களான கப்டன் பாஞ்சாலி, லெப்டினன்ட் பைந்தமிழன் அகியோரின் தாயாரான மேரிரேஸ்சலின் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் துணைப்பொறுப்பாளர் மூர்த்தி ஏற்றிவைத்தார்.

நூலின் வெளியீட்டுரையை போராளி புரட்சிகா நிகழ்த்தினார். (201)

# பதில் பொது நிதியாளராக வெரலுபிற்றிய நியமனம்

பதில் பொது நிதியாளராக, புத்தசாசன அமைச்சின் செயலாளர் என்.வெரலுபிற்றிய நியமனம் செய்யப்பட்டார். என்.எஸ்.ஏ.என்.செனவிரட்ணவுக்குப் பதிலாகவே இந்த நியமனம் வழங்கப்பட்டது.

பொது நிதியாளர் செனவிரட்ன- சுமார் 390 மில்லியன் ரூபாவை பிரமுக வங்கியில் வைப்புச் செய்தமைக்காகப் பெருமளவு லஞ்சம் பெற்றார் என மத்திய வங்கியினால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, லஞ்ச ஊழல் ஆணைக்குழு அவருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொண்டது. இந்த நிலையில், பொது நிதியாளர் செனவிரட்ண தற்சமயம் தலைமறைவாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை அடுத்தே அவரின் இடதிற்குப் பதில் பொது நிதியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.



திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் - கல்லூரியின் உப அதிபர் கே.சாந்தகுமார் நன்றியுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

### தமிழ் உலகம் அறிமுகவிழா

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடாத்தும் 'தமிழ் உலகம்' இதழ் அறிமுகவிழா - இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் அறிமுக உரைகளை - கலாநிதிகளான என்.சண்முகலிங்கன், எஸ்.சிவலிங்கராஜா, தி.கமலநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ப)

# வெலிகம பஸ் விபத்தில் 5 பேர் பலி, 70 பேர் காயம்!

(கொழும்பு)

வெலிகம, சுகர்கம பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் - ஐந்து பேர் உயிரிழந்ததுடன், எழுபது பேர் காயமடைந்தனர்.

மாத்தறையிலிருந்து காலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று, மாத்தறை நோக்கி வந்துகொண்டிருந்த சொகுசு பஸ்ஸுடன் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

உயிரிழந்த ஐவரில் மூவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் தனியார் பஸ் சாரதி, றுகுணு பல்கலைக்கழக பெண் விரிவுரையாளர் ஒருவரும் உயிரிழந்தனர். ஏனையவர்களை அடையாளம் காண்பதற்காக அவர்களது சடலங்கள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# மருந்துப் பொருட்கள் தரநிர்ணயம் சட்டம் அமுல்படுத்துவதில் சிக்கல்

மருந்துப் பொருட்களின் தரநிர்ணயம் தொடர்பாக நாட்டில் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக நடைமுறைச் சிக்கல் இருப்பதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவிக்கின்றது.

தற்போது தரநிர்ணயம் தொடர்பாகவுள்ள சட்டங்களை அமுல்படுத்தினால், நாட்டின் அதிகமான பிரதேசத்தில் அதிகாரசபையின் பணியாளர் கித்சிறி குணவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

காலாவதியாகிய மருந்துப் பொருட்களைப் போலி முத்திரை, திகதி என்பன குத்தப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன எனக் கிடைத்த தகவலை அடுத்தே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

காலாவதியான 5 லொறி மருந்துப் பொருட்கள் - சிலதினங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருந்துப்பொருட்கள், போலித் திகதி முத்திரை குத்துவதற்குத் தயாரான நிலையில் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில்

# வெற்றிபெறும் நிலையில் தென்னாபிரிக்க அணி!

(செஞ்சூரியன் பார்க்)

தென்னாபிரிக்க - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது இரண்டாவது இனிங்ஸை விளையாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இரண்டாவது இனிங்ஸிலும் அணித்தலைவர் லாரா சிறப்பாக விளையாடவில்லை. முதல் இனிங்ஸில் 34 ஓட்டங்க்ளைப்பெற்ற இவர் இரண்டாவது இனிங்ஸில் ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தற்போது கைல் 73, சர்வான் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் முதல் இனிங்ஸில் நிற்னி சிறப்பாகப் பந்துவீசி 49 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், நெல் 3 விக்கெட்டுக்களையும், பொலக் கலிஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



இரண்டாவது இனிங்ஸில் நிற்னி, கலிஸ், நெல் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர்.

தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் ஆறு விக்கெட் டுக்களை இழந்து 604 ஓட்டங்களை எடுத்த நிலையில், தனது ஆட்டத்தை இடைநிறுத்தியது. நடந்துமுடிந்த மூன்று போட்டிகளில் தென்னாபிரிக்கா இரண்டு போட்டிகளில் வென்றுள்ளது. ஒரு போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

தற்போது நடந்துவரும் போட்டியிலும், தென்னாபிரிக்கா வெற்றி பெறும் வாய்ப்பே அதிகமாகவுள்ளது.

## நெஞ்சைத் தொட்டுவிட்ட வீரர் இர்பான் பதான்

### சௌரவ் கங்கூலி பாராட்டு



12 ஆண்டுகளுக்கு பிறகு அவுஸ்ரேலிய மண்ணில் இந்தியா ஒருநாள் போட்டி ஒன்றில் வெற்றிபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் பெற்ற இந்த வெற்றி குறித்து இந்திய அணித் தலைவர் கங்கூலி நிருபர்களிடம் கூறியதாவது-

இந்திய அணியின் துடுப்பாட்டம், பந்துவீச்சு திருப்தி அளிக்கும் வகையில் இருந்தது. இரண்டும் சமநிலையில் இருந்தன. துடுப்பாட்டத்தில் லஷ்மனின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

இர்பான் பதான், பாலாஜி ஆகியோரது பந்துவீச்சு பாராட்டும்படி இருந்தது. இருவரும் சேர்ந்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி வெற்றிக்கு உதவியாக இருந்தார்கள். பதான் நெஞ்சைத் தொட்டுவிட்ட வீரர் ஆவார். அவருக்கு சிறந்த எதிர்காலம் இருக்கிறது. அவரது பந்துவீச்சு நன்றாக இருந்தது.

பாலாஜியின் சிறந்த பந்துவீச்சு இதுவாகும். டெஸ்ட் போட்டியில் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. சில ஒரு நாள் போட்டியில் வாய்ப்புக் கொடுத்தோம். இதை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு சிறப்பாகப் பந்து வீசினார். இவ்வாறு கங்கூலி கூறினார்.

மூன்று நாடுகள் போட்டியின் 6 ஆவது லீக் ஆட்டம் - பகல் இரவு ஆட்டமாக பிரிஸ்பேனில் இன்று நடைபெறுகிறது. இதில் இந்தியா-சிம்பாப்வே அணிகள் 2 ஆவது முறையாக மோதுகின்றன.

காலை 9.15 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகும்.

## இந்தியாவுடனான அடுத்த போட்டியில் மத்தியூ ஹைடன் விளையாடமாட்டார்



இந்தியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் பிரிஸ்பேனில் நடந்த போட்டியில் சிறப்பாக விளையாடிய அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடன் முழங்காலில் காயமடைந்துள்ளார்.

இதனால் - இவர் நாளைமறுதினம் சிட்னியில் நடைபெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடமாட்டார் எனவும், எதிர்வரும் 26 ஆம் திகதி அடிலெய்டில் நடைபெறவுள்ள சிம்பாப்வேக்கு எதிரான போட்டிக்கு முதல் குணமடைந்து, அந்தப் போட்டியில் கலந்துகொள்வாரெனவும் அவுஸ்ரேலிய அணிக்கு வீரர்களைத் தெரிவுசெய்யும் ரீவர் கோன்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவுக்கெதிராக நாளைமறுதினம் சிட்னியில் நடக்கும் போட்டியில் - ஹைடனுக்குப் பதிலாக சைமன் ஹட்ரிச் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தெரிவு குறித்து கருத்து தெரிவித்த ஹட்ரிச் - உண்மையாக இது எனக்கு ஒரு எதிர்பார்க்கமுடியாத வாய்ப்பு. இந்த வாய்ப்பை எனது இரு கைகளாலும் பற்றிக்கொள்வதற்கு ஆவலாக உள்ளேன் எனத் தெரிவித்தார்.

## அவுஸ்ரேலியாவுடனான போட்டியில் டெண்டுல்கருக்கு காயம்

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் - அவுஸ்ரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் பிரிஸ்பேனில் நடந்த போட்டியில் கணுக்காலில் காயமடைந்துள்ளார்.

இந்தப் போட்டியின் இடையில் அவருக்கு கணுக்காலில் காயமேற்பட்டது. இருந்தும் வலியுடன் அவர் தொடர்ந்தும் சிறப்பாக ஆடினார். டெண்டுல்கருக்கு ஏற்பட்டது சிறிய காயம்தான் - ஓய்வு எடுத்தால் குணமடைந்துவிடுவார் என்று இந்திய அணியின் உடற்பயிற்சி இயக்குநர் லைப்ஸ் தெரிவித்தார்.

இதனால், சிம்பாப்வேக்கு எதிராக இன்றைய ஆட்டத்தில் இவர் கலந்து கொள்ளமாட்டார். ஏற்கனவே ஷேவாக், அகர்கர் இருவரும் காயமடைந்த நிலையில் டெண்டுல்கரும் காயமடைந்திருப்பது ரசிகர்கள் மத்தியில் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

# விளையாட்டு

## அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் டேவிட் கூக்ஸ் மோதலில் மரணம்



அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டேவிட் கூக்ஸ் அவுஸ்ரேலியாவில் அமைந்துள்ள விடுதி ஒன்றுக்குமுன்னால் இடம்பெற்ற மோதலில் - தலையில் படுகாயமடைந்த நிலையில் மரணமடைந்தார்.

48 வயதான கூக்ஸ் - 23 டெஸ்ட் போட்டிகளில் 1977 - 1986 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விளையாடியுள்ளார்.

சவுத் அவுஸ்ரேலிய அணியினரை இவர் பயிற்றுனராக உள்ள விக்ரோறியா அணி வென்றதைக் கொண்டாடும் முகமாக, கடந்த ஞாயிறு ஹோட்டல் ஒன்றில் சகவீரர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்தவேளை, இடம்பெற்ற மோதலிலேயே கூக்ஸ் தலையில் காயமடைந்தார்.

இவ்வாறு தலையில் காயமடைந்து சுயநினைவை இழந்த இவர், சுயநினைவு திரும்பாத நிலையிலேயே மரணமானார். இவரது மரணம் தொடர்பாக நேற்று இவரது சகோதரர் அறிவித்தார்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரரான இவர் - டெஸ்ட் போட்டிகளில் 1306 ஓட்டங்களை எடுத்ததுடன், ஆட்டமிழக்காமல் 143 அதிகூடிய ஓட்டங்களையும் பெற்றார். இவரது சராசரி 34.36 ஆகும். இதேவேளை, அவுஸ்ரேலியாவில் நடந்த பிராந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் 9364 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

## அ.தி.மு.கவுடன் கூட்டணி ஏற்படும் வாய்ப்பு உள்ளது!

### பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு



(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதையடுத்து, தமிழகத்தில் கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் தீவிரம் அடைந்துள்ளன. பாரதீய ஜனதா கூட்டணியிலிருந்து விலகிய தி.மு.க- காங்கிரசுடன் சேர்ந்து புதிய கூட்டணி அமைத்துள்ளது.

பா.ம.க., ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக், தேசிய லீக் கட்சிகளும் இந்தக் கூட்டணியில் சேர்ந்துள்ளன. தனித்து விடப்பட்ட பாரதீய ஜனதா கட்சி தலைவர்கள் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர ஆர்வம் காட்டினர்.

தமிழக பாரதீய ஜனதா தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், அ.தி.மு.கவுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுத்தார். ஆனால், அ.தி.மு.க. தரப்பிலிருந்து கூட்டணிக்கான சமிக்ஞை இதுவரை கிடைக்கவில்லை.

துணைப் பிரதமர் அத்வானி ஏற்கனவே முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரான சுகுமாரன் நம்பியார் சனியன்று ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

அ.தி.மு.க - பாரதீய ஜனதா கூட்டணி சம்பந்தமாக இந்த சந்திப்பு அமைந்திருந்ததாக கூறப்பட்டது. ஆனாலும், அதுபற்றி அதிகாரபூர்வ தகவல் இருதரப்பில் இருந்தும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், அகில இந்திய பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டு வைத்துக்கொள்ள வாய்ப்புள்ளது என்று கூறினார். இது குறித்து பெங்களூரில் நிருபர்களிடம் வெங்கையா நாயுடு கூறியதாவது-

நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் வருகிறது. இந்த நிலையில், தமிழ்நாட்டில் அ.தி.மு.க. வுடன் பாரதீய ஜனதா கூட்டணி வைத்துக்கொள்ளுமா என்று கேட்கிறீர்கள்.

அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி வைத்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இந்த விஷயத்தில் நாங்கள் திறந்த மனதுடன் இருக்கிறோம்.

அ.தி.மு.க.வுடன் இதுவரை கூட்டணி பற்றி எந்த பேச்சுவார்த்தையும் நாங்கள் நடத்தவில்லை. அ.தி.மு.க. வுடன் தேர்தல் உறவு வைத்துக் கொள்வதை நான் ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை.

தேர்தல் அறிவிப்பு வந்த பிறகுதான் அரசியல் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொள்வது குறித்து பாரதீய ஜனதா இறுதி முடிவு எடுக்கும் என்று வெங்கையா நாயுடு கூறினார்.

## பிரதமராக வேண்டும் என்ற கனவில் இல்லை முதல்வராக இருப்பதில் மகிழ்வடைகின்றேன்

### தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவிப்பு

ஆங்கில பத்திரிகைக்கு எழுத்தாளர் சோ அளித்த பேட்டியில் "தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும், புதுச்சேரியில் ஒரு தொகுதியிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்று பிரதமராக வேண்டும் என்று ஜெயலலிதா கனவுகாண்கிறார். இது நடைமுறையில் நிறைவேறாது" என்று கூறியிருந்தார்.

சோவின் இந்த விமர்சனத்துக்கு முதலமைச்சர் ஜெயலலிதா பதில் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

நான் நாட்டின் பிரதமராக வேண்டும் என்ற கனவில் இல்லை. அந்த பதவிக்கான போட்டியிலும் இல்லை. தமிழக முதலமைச்சராக இருப்பதிலேயே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நாடாளுமன்ற தேர்தலில் அதிக இடங்களில் அ.தி.மு.க. வெற்றிபெற வேண்டும் என்று நான் சொல்வதற்கு ஒரே காரணம், தமிழ்நாட்டின் உரிமைகளை மத்திய அரசிடம் கேட்டு பெறவேண்டும் என்றால், அதிக எண்ணிக்கையில் இருந்தால்தான் முடியும்.

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் நடந்த சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதா வெற்றிபெற்றதை அறிந்ததும் வசுந்தரா ராஜேவுக்கும், உமாபாரதிக்கும் வாழ்த்துத் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தேன். அவர்கள் பத்திரிகையில் வெளியிடாதது என்னுடைய தவறு அல்ல.

மேலும், வசுந்தரா ராஜே தொலைபேசியில் என்னிடம் தொடர்பு கொண்டு, அவரது மந்திரிசபை பதவியேற்பு விழாவுக்கு வரும்படி என்னை அழைத்தார். அவருடைய பதவியேற்பு விழா வெற்றிகரமாக அமைய நான் வாழ்த்து தெரிவித்தேன்.

அது மட்டுமன்றி, ராஜஸ்தான் மாநில தலைமை செயலாளரிடம் இருந்து தமிழக அரசின் தலைமை செயலாளருக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த கடிதத்தில் ராஜஸ்தான் மந்திரி சபை பதவியேற்பு விழாவில் தமிழக முதலமைச்சர் கலந்து கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.



வேறு பல அலுவல்கள் இருந்ததால்தான் பதவியேற்பு விழாவுக்கு செல்லமுடியவில்லை. நானும் வசுந்தரா ராஜேவும் நல்ல நண்பர்கள் என்பது சோவுக்குத் தெரியாது.

இவ்வாறு முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.



கிட்டுப் பூங்காவில் நடைபெற்ற நினைவுதின நிகழ்வில் ஈகச்சுடரேற்றும் யாழ் - நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகளைப் படத்தில் காணலாம்.



வர்த்தக சமூகத்தினரின் உதவியுடன் யாழ்.குடாநட்டுப் பாடசாலைகளில் கல்விகற்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில் - மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், மாணவி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இயற்கை வளமான நிலத்தடி நீர் படிப்படியாக மாசடைந்து வருகிறது

## கீரிமலைப் பகுதி விவசாய போதனாசிரியர் தெரிவிப்பு

பெறுமதிமிக்க இயற்கை வளமான நிலத்தடி நீர் படிப்படியாக மாசடைந்து வருகிறது. இதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளையும், விழிப்புணர்வு பிரசாரங்களையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனக் கீரிமலை கமநல சேவைகள் நிலைய விவசாயப் போதனாசிரியர் எஸ்.மணிவண்ணன் தெரிவித்தார்.

தைப்பொங்கல் தினத்தன்று அளவெட்டியில் இடம்பெற்ற தூவல் நீர்ப்பாசன அறிமுகவிழாவில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அளவெட்டி விவசாயிகள் சம்மேளனத தலைவர் ந.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் உட்பட பலர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் விவசாயப் போதனாசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தின் முக்கிய வளமாகக் கருதப்படும் நிலத்தடி நீர் - இன்று மாசடைந்து வருகிறது. விவசாய நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படும் இரசாயன, களை, கிருமி நாசினிகள் என்பவற்றின் தாக்கத்தின் காரணமாகவே பெரும்பாலும் இந்த மாசடைதல் ஏற்பட்டு வருகிறது.

எமது விவசாயிகள் மத்தியிலே, இன்று நல்ல விளைச்சலை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே நோக்கமாக இருக்கிறதே தவிர, வேறுவிதமாகச் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். செயற்கை உர வகைகள், களை, கிருமி நாசினிகள் என்பவற்றைத் தாராளமாக உபயோகிக்கின்றார்கள். இவை சூழலுக்கு தீங்காக அமைவதோடு, நிலத்தடி நீரையும் மாசடையச்செய்கின்றன.

அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி - யாழ்ப்பாணத்தின் அநேக பகுதிகளிலுமுள்ள நீர் மாசடைந்து, குடிப்பதற்கு உகந்ததல்லதாக மாறிவிட்டதாக அறியப்பட்டுள்ளது. இந்த நிலை நீடிக்க அனுமதிக்கக்கூடாது.

பயிர்களுக்குப் பாத்தி நிறைய நீரைவிட்டு, அளவுக்கு அதிகமாக உரங்களை, மருந்துகளை இடுவதன்மூலமே கூடியவிளைச்சலைப் பெறமுடியுமென எமது விவசாயிகள் நம்புகிறார்கள். ஆனால், உர வகைகள் பாத்தி நிறைய விடப்படும் நீரின் காரணமாக கரைந்துகீழ் நோக்கிச்செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால், முழுமையாகப் பயிருக்குப் பயன்கிடைக்காமற் போவதோடு, நீரும் மாசடையும் வாய்ப்பு ஏற்படுகிறது எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளை, முகாமையாளர், விவசாயி சார்பில் மு.சேனாதிராசா ஆகியோரும் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தூவல் நீர்ப்பாசன திட்டத்தை இரிடெக் எனும் தனியார் நிறுவனம் அறிமுகம் செய்துவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அனுராதபுரத்தில் தலைமையகத்தைக்கொண்ட இந்த நிறுவனத்தின் கிளை காங்கேசன்துறை வீதி, இணுவிலில் அமைந்துள்ளது. (ச)

### தொடர்புகொள்ளக் கோரிக்கை

படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக நடைபெற்றுவரும் வழக்கு விசாரணைகள் தொடர்பாகப் பின்வருவோரை தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளும்படி காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் பொ.சற்குணம் கேட்டுள்ளார்.

அரியாலையைச் சேர்ந்த கே.லோகேஸ்வரன், கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பரமு சந்திரசேகரம் ஆகியோரையே தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இவர்களது முறைப்பாடு தொடர்பான வழக்கு விசாரணைகள் - யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடைபெறவுள்ளமையால், அவற்றுக்கு சமுகமளிப்பது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கே தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### தையல் பயிற்சிக்கு விண்ணப்பம்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், பிரதேச செயலகப் பிரிவுகளில் வருடாந்தம் நடைபெற்றுவரும் தையல் பயிற்சி வகுப்பிற்கு இந்த ஆண்டுக்கென 25 மாணவர்களுக்கே ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதுவரைகாலமும் 30 மாணவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டபோதும், தற்போது 25 பேராக குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்களின் பெயர், முகவரி போன்றவற்றை அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலாளர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்கள் போன்றோரை வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் கோரியுள்ளார். (113)

# கலைச்சுடர் விருது வழங்கி எட்டு கலைஞர் கெளரவிப்பு

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரால் எட்டுக் கலைஞர்கள் கலைச்சுடர் விருது வழங்கிக் கெளரவிக்கப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வருடாந்த கலாசார விழாவிலேயே இந்தக் கெளரவம் அளிக்கப்பட்டுள்ளது.

கெளரவிக்கப்பட்ட கலைஞர்களின் பெயர் விபரங்கள் வருமாறு - பண்டிதர் க.நாகலிங்கம் (இலக்கியம்), இ.கேதீஸ்வரன் (நாதஸ்வரம்), ஐ.சிவபாதம் (மிருதங்கம்), வி.கே.நடராஜா (இசை), க.அமரசிங்கம் (நாடகம்), மா.தேவராசா (நாடகம்) கே.செனகரட்ணம் (நாடகம்), என்.தெட்சணா மூர்த்தி (ஓவியம்)

இந்தக் கலைஞர்களை வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா பொன்னாடை போர்த்தி கெளரவித்ததுடன், கலைச்சுடர் விருதுக்கான பாராட்டுப்பத்திரத்தையும் வழங்கினார்.

# கோம்பயன் மணல் மயானப் பகுதியில் குவியும் கழிவுகளால் துர்நாற்றம் வீசுகிறது

இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்களின் எச்சங்களை கொண்டு வந்து கோம்பயன் மணல் மயானப் பகுதியில் வீசுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதால், அந்த வீதியால் பயணிப்போர் பெரும் அசெளகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள இந்த மயானத்தின் வீதியோரமாக மிருகங்களின் கழிவுகள், வீட்டில் சேரும் கழிவுகள் எனவும் பல்வேறு கழிவுகளையும், இரவு வேளைகளில் சிலர் விசமத்தனமாகக் கொண்டுவந்து கொட்டிவிடுகின்றனர்.

இதனால், அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசத்தொடங்கியுள்ளது. அந்தப் பகுதியில் அநாதரவாகக் கொண்டுவந்து விடப்படும் நாய், பூனை முதலான மிருகங்கள் இறப்பதாலும், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

கடந்த ஆண்டு அந்தப் பகுதி கிராம சேவையாளர் சகுந்தலா தேவியால் அந்தப் பகுதியில் சுகாதாரத்தினைப் பாதுகாப்பதற்கும், கழிவுகளைச் சேராமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவும் என விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

எனினும், மீண்டும் அந்தப் பகுதியில் சேரும் கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதால், அந்த வீதியூடாகப் பயணிக்கும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமையால், சம்பந்தப்பட்டவர்கள் இதற்குச் சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவு

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு நிகழ்வு, கடந்த பொங்கல் தினத்தன்று நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

நிலையத்தின் புதிய தலைவராக சு.கணேசலிங்கம், செயலாளராக க.கமாலியேல், பொருளாளராக அ.அருந்தவசீலன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (113)

# விறகு வெட்டச் சென்ற இளைஞன்மீது தாக்குதல் நான்கு பொலிஸார் விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

விறகு வெட்டச்சென்ற சமயம் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து, மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸார் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மூன்றாம் வட்டாரம் ஆனைக்கோட்டையைச்சேர்ந்த பிரான்ஸிஸ் ஜெசிந்தன் என்னும் இளைஞர் விறகு வெட்டுவதற்காகத் தனது வீட்டிற்கு அருகிலுள்ள வெறும் காணி ஒனறிற்குச்சென்றுள்ளார்.

அந்தவேளை அங்கு வந்த நான்கு பொலிஸார் அவரை இழிவான வார்த்தைகளால் பேசியதுடன், பொலிஸார் ஒருவர் கைகளாலும் கால்களாலும் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து மிகவும் அச்சமடைந்த அவர், தனது வீட்டிற்குச்சென்று நடந்தவற்றை உறவினரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து உறவினர் - மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு தெரிவித்ததுடன், யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் இந்தவாரம் நடைபெறவுள்ளதால், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாரையும் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் - மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பை அனுப்பிவைத்துள்ளார்கள். (ப)

# பாடசாலையின் தரத்தினை உயர்த்துவது பெற்றோர்களின் கையிலே தங்கியுள்ளது

## வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர்

(ஆழியவளை)

ஒரு பாடசாலையின் தரத்தினை உயர்த்துவதற்கு, அந்தப் பாடசாலையில் அதற்கு ஏற்ற வகையில் மாணவர்களின் எண்ணிக்கை இருப்பது அவசியமாகும்.

எனவே, இந்தப்பொறுப்பு பெற்றோர்களின் கையிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை 13 வருடங்களின் பின் சொந்த இடத்தில் இயங்கும் வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை திறப்பு விழாவில் கலந்துகொண்ட அவர், மேலும் தெரிவிக்கையில் - குடாநாட்டின் நகர்ப்புறப் பாடசாலைகளில் மாணவர்கள் வேண்டத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தநிலைமை கிராமப்புற பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருப்பதற்கு, பாடசாலைச் சமூகம் கண்ணும் கருத்துமாக செயற்பட வேண்டியது இன்றியமையாதது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் சி.தாயகன் ஏற்றிவைத்தார். பாடசாலையின் பெயர்ப்பலகையினை - தாளையடி பங்குத்தந்தை பிரான்சிஸ் அடிகளார் திரைநீக்கம் செய்து வைத்தார். பாடசாலை மண்டபத்தினை - மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் திறந்து வைத்தார். (122)

# யாழ்.நகரப் பகுதியிலுள்ள தபாலக வீதியை ஒருவழிப் பாதையாக பாவிக்கும்படி பொலிஸார் கோரிக்கை

நகரத்தினுள் ஏற்படும் வாகன நெரிசல்களைத் தவிர்ப்பதற்காக தபாலக வீதியை ஒருவழிப் பாதையாகப் பாவிக்கும்படி யாழ்.பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். மிகவும் ஒடுக்கமான இந்தத் தபாலக வீதியை - இரு வழிப் பாதையாக உபயோகிப்பதனால், வாகன நெரிசல்கள் ஏற்படுவதாகவும், இதனால் வாகன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தபாலக வீதியின் அருகிலேயே தனியார் பஸ்வண்டிகளை நிறுத்தும் வாகன தரிப்பிடம் அமைந்துள்ளமையால், அதிகமான போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி ஆகியன ஏற்கனவே ஒரு வழிப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை மீறுவோரிடமிருந்து பொலிஸார் தண்டப்பணமும் அறவிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தபாலக வீதியும் முன்னரேயே ஒரு வழிப் பாதையாகப் பிரகடனப்படுத்தப்பட்டாலும், அதனை பொதுமக்கள் கவனத்தில் கொள்ளாது செயற்படுகின்றனர். இடைக்கிடை இந்த வீதியிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

ஸ்ரான்லி வீதியில் இருந்து நகருக்குள் நுழையும் வழியாகவே தபாலக வீதி பயன்படுத்தப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.




# நீருக்குத் தடா!



ஐக்கிய நாடுகள் சபையின் சூழல பாதுகாப்புக்கான அமைப்பு பல்காஸ் ஏரி வற்றிப்போவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகத் தெரிவித்திருக்கிறது. அணமையில் ஏரல் நதி வற்றிப்போனது யாவரும் அறிந்ததே. பல்காஸ் ஏரி - மத்திய ஆசியாவின் இரண்டாவது பெரிய ஏரியாகக் காணப்படுகின்றது. கஜகஸ்தானின் கிழக்குப்பகுதியில் ஏறக்குறைய 400 Km வடக்குப் புறமாக இது காணப்படுகின்றது. ஏரல் நதிக்கு ஏற்பட்ட கதிதான் இதற்கும் ஏற்படும் என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இதற்குக் காரணம் - சீனாவில் காணப்படுகின்ற இலி என்ற ஆறுதான். இந்த ஆற்றிலிருந்துதான் பல்காஸ் ஏரி நீரினைப் பெற்றுக்கொள்கின்றது.

சீன அரசு இதற்கு அண்மையில் தடை விதித்திருக்கின்றது. இது முற்றுமுழுதாக அரசியல் கலந்த நடவடிக்கை எனக் கூறப்படுகின்றது. இதற்குச் சீனத் தரப்பில் அதிகரிக்கும் சனத்தொகைப் பெருக்கத்துக்கேற்றவாறு தங்கள் நாட்டினுடைய நீர்த்தேவையைப் பூர்த்திசெய்யவே இந்த நடவடிக்கை எனக் கூறப்படுகின்றது. ஆனால், கஜகஸ்தான் விளைநிலங்கள் நீரில்லாது பாழ்படுகின்றநிலை தோன்றியுள்ளது.

இதிலும் மிகக்கேவலம் என்னவென்றால், மக்கள் கழிவுகளை இந்த ஏரிக்குள் வீசுவதுதான். இது இந்தப் போக்கிலே போனால், கஜகஸ்தான் நாட்டின் விவசாயம் மிகவும் கேள்விக்குறிதான். இதற்கிடையில் முன்னாள் சோவியத்யூனியன் நாடுகளில் சுத்தமான நீர் கிடைக்கும் வழிகளும் அருகிவருகின்றன.

## திரை விமர்சனம்

# எங்கள் அண்ணா



வழமையான பொலிஸ் அல்லது கிராமம் என்று நினைத்து விஜயகாந் படம் பார்க்கப்போகிறவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கின்றார் இயக்குநர் சித்திக். சின்ன வயசுக் காதல் பல உயிர்களைப் பலிவாங்கிவிட, தனிமரமாகிறார் விஜயகாந். காதலித்தவள் தந்திரமாகச் சொத்தைப் பிடுங்கிக்கொள்கின்றாள்.

உழைத்து உழைத்து உயரத்திற்குப் போகின்ற விஜயகாந், தன் தங்கை சுவர்ணமால்யாவைக் கண்டுபிடித்துப் படிக்கவைக்கிறார். இது சுவர்ணமால்யாவிற்குத் தெரியாது. காதலால் வெறுப்புக்கொண்ட விஜயகாந்திற்கு திருமணம் என்றாலே அலர்ஜி. அவருக்குக் காதல் வந்ததா? கல்யாணம் நடந்ததா? அண்ணன் - தங்கை இணைந்தார்களா? இது தான் படம். வடிவேலு, ஸ்ரீபாண்டியராஜன் ஜோடி புண்ணியத்தில் நகைச்சுவை கலகலப்பு. தங்கையைப் பக்கத்து வீட்டில் வைத்துக் கொண்டு பார்த்துப் பார்த்துப் பரவசப்படுவது பழைய சென்டிமென்ட், சண்டைக் காட்சிகளில் விஜயகாந் வெளுத்து வாங்கியிருக்கிறார். தங்கையாக வரும் சுவர்ணமால்யா - எலும்பும் தோலுமாக நிற்கின்றார். கதாநாயகி நமீதா. இது போதாதென்று பிரபுதேவா வேறு. பாண்டியராஜன், பிரபுதேவா நிலைமை இப்படியாகிவிட்டதே? ஆழ்ந்த அனுதாபங்கள்.

எங்கள் அண்ணா 2004 இன் "பாசமலர்"

- PNS -

# CD யின் சிக்கல்



பழைய காலத்து வானொலி இசைத்தட்டுக்கள் இன்றும் புழக்கத்திலிருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதற்கு அடுத்ததாக ஒன்று, இரண்டு, மூன்று தசாப்தத்தினைத் தன்னகத்தே கொண்ட வானொலி கசட் ரெக்கோடர்கள். இவை எல்லாவற்றையும் தாண்டி அண்மையில் சந்தைக்கு வந்து, ஒரு சக்கைப் போடு போடுகின்ற CD இசைத்தட்டுக்களுக்கிருக்கின்ற மவுசு தனிதான். அதிலும், MP3 CDகள் என்றால் எல்லோரும் விரும்புகின்றார்கள். CD இல் பாடல்கள் பதிவது என்பது கசட் போன்றது அல்ல. இது மிகவும் கடினமானது. பொதுவாக CD இல் பாடல்கள் பதிந்தால், அந்த CD இனைக்கொண்டு வேறு பல CD களைப் பதியக்கூடியதாக இருந்தது. ஆனால, திருட்டு CD களிலிருந்து தப்புவதற்காக ஒருதரம் பதிவுசெய்த CD ஆனது மீண்டும் ஒரு முறை பதியமுடியாதளவுக்கு அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள் பதில் சொல்கின்றன. அதிலும் அமெரிக்காவில் வெற்றி பெற்றிருக்கின்ற இந்த CD திட்டம், மற்றைய வளர்முக நாடுகளுக்கும் பரவப்பட இருக்கிறது. இதன்மூலம் ஒரேயொரு Master CD இனை மையமாகக் கொண்டுதான் இனி CD க்கள் பதியப்பட இருக்கின்றன. இந்தத் தகவல் CD பைத்தியங்களுக்கு இன்பமா? அல்லது துன்பமா?

# துவாரங்களுடன் முகில்கள்



அமெரிக்காவில், சுலபாமா மாநிலத்தில் முகில்களில் காணப்பட்ட பாரிய துவாரங்கள் விஞ்ஞானிகளை ஆச்சரியத்திற்குட் படுத்தியுள்ளது. வானியல் தொடர்பான அறிஞர்கள், வானில் காணப்பட்ட பனித்துகள்கள் முகில்களுக்கூடாக முகில் கூட்டங்களுடன் இணைந்தபின், ஆவியாகும்போது வெற்றிடம் ஒன்று உருவாகியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனிடையே விமானங்கள் இந்த முகில் கூட்டங்களுக்கூடாகச் செல்லும்போது, விமானங்களிலிருந்து வெளியேறும் புகை மண்டலம் - பனிக் கட்டித்துகள்களை ஆவியாக்குவதால் நிகழலாம் எனவும் அறிவித்துள்ளார்கள்.

# அழிவை நோக்கிய பயணம்

உலகமயமாக்கல் என்பது நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில், அதிகரித்துவரும் சனத்தொகை, அவற்றின் தேவைகள் ஆகியவற்றினைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இருக்கின்ற பெருவாரியான நாடுகள் - சூழலை மாற்றியாவது தேவைகளைப் பூர்த்திசெய்யத் தயாராகவுள்ளன. இதன் காரணமாக சூழலில் ஏற்படப் போகின்ற மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்கக்கூடிய நிலையில் மனிதர்கள் இல்லை. வாகனங்களின் இரைச்சல்களும் மற்றும் கழிவு வாயுக்களும் சர்வதேசப் பயங்கரவாதத்திலும் கொடியனவாக இருப்பதாக இங்கிலாந்து நாட்டின் சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவர் கூறுகின்றார். காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் வெகுவாகப் பாதிக்கப்படுவது மிருகங்கள்தான். அதிலும் அவற்றின் பார்வைப்புலம் அதிகம் பாதிக்கப்படுகின்றது. அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி - மனிதனுக்குத் தேவையான இயற்கை வளம் 33 திரில்லியன் அமெரிக்க டொலர்கள். ஆனால், அவனுக்கு கிடைத்தது 18 திரில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே. காலகாலமாக எவ்வளவுதான் சூழல் மாசடைதல் பற்றிக் கூறினாலும், கிடைப்பது ஒன்றுமில்லை. அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்ற உலகிற்கு உடனடி நிவாரணமாகப் பயன்படக்கூடியது ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சிகள்தான்.



# மார்பப் புற்றுநோய்

இங்கிலாந்தில் வசிக்கும் ஆசியப் பெண்களிடையே மார்பகப் புற்றுநோயின் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் மாறுபாடுகள் காணப்படுவதாக இங்கிலாந்திலுள்ள இனங்களுக்கு (ETHNICS) இடையே காணப்படும் நோய்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள குழுவொன்று தெரிவித்துள்ளது. தமது ஆய்விற்கு இந்தியா, பாகிஸ்தான், குஜராத்திய இந்துப் பெண்கள் ஆகியோரை ஈடுபடுத்தியுள்ளார்கள்.



குஜராத்திய இந்துப் பெண்களுடன் ஒப்பிடும்போது - இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் முஸ்லிம் பெண்களிடையே மார்பக புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்கள்.

உடல் அமைப்பும், வாழ்க்கை முறையுமே புற்றுநோயின் பாதிப்பில் மாற்றங்கள் ஏற்பட்டதற்குக் காரணமெனவும் தெரிவித்தார்கள்.

தெற்காசியாவிலிருந்து இங்கிலாந்திற்கு வந்திருந்த முதல் தலைமுறையைச் சேர்ந்த 700 பெண்களை ஆய்வில் ஈடுபடுத்தி இருந்தனர். இவர்களில் 240 பெண்கள் மார்பகப் புற்றுநோய்க்கான சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

மேலும் இங்கிலாந்துப் பெண்களுடன் தெற்காசியப் பெண்களை ஒப்பிட்டு நோக்கியபோது, தெற்காசியப் பெண்கள் மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகளை முன்கூட்டியே நடத்த முன்வருவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பெண்களிடம் அவர்களின் உணவுப்பழக்கம், தேகப்பயிற்சி, குடும்பத்தில் மார்பகப் புற்றுநோயால் பாதிப்படைந்தவர்கள் தொடர்பான தகவல்கள், பிள்ளைகளின் எண்ணிக்கை, பிள்ளைகளுக்கு எவ்வாறு பாலூட்டினார்கள் என்ற தகவல்கள் ஆராயப்பட்டன. சிறுவயதில் குழந்தை பெற்றவர்கள், அதிகம் குழந்தை பெற்றவர்கள், பாலூட்டி பிள்ளைகளை வளர்த்தவர்கள் - மார்பகப் புற்றுநோயினால் குறைவாகத் தாக்கப்பட்டிருந்தார்கள்.

பாகிஸ்தான், இந்திய முஸ்லிம் பெண்கள் இளம் வயதில் திருமணம் செய்திருந்தும், குஜராத்திய பெண்களைவிட கூடுதலாக மார்பகப் புற்றுநோயின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தனர்.

குஜராத்திய இந்துப் பெண்களில் கூடுதலானவர்கள் தரமான உணவை உட்கொண்டிருந்தார்கள். உணவில் கூடுதலான நார்ச்சத்து (FIBRE) பழங்களை உண்டதனால் கிடைத்திருந்தது.

மேலும் இந்தப் பெண்களின் இடுப்பு அமைப்பு (WAIST LINE) சிறிதாகவும் காணப்பட்டது. இது அவர்கள் அதிகம் வேலை செய்வதனால் ஏற்பட்டிருந்தது. பாகிஸ்தான், இந்திய முஸ்லிம் பெண்கள் இவற்றிற்கெதிராக அமைந்திருந்ததால், புற்றுநோயின் பாதிப்பு அதிகரித்துக் காணப்பட்டது.

# கையடக்கத் தொலைபேசி பயம் இல்லாதது



கையடக்கத்தொலைபேசிகளைப் பாவிப்பவர்களுக்கு அந்தத் தொலைபேசியிலிருந்து வெளிப்படும் கதிரியக்க அலைகள் - மூளைக்குச் செல்வதால், பாவனையாளர்களுக்கு மூளையில் நோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக ஆரம்பத்தில் கருதப்பட்டுவந்தது. ஆனால், பிரித்தானிய விஞ்ஞானிகள் கையடக்கத்தொலைபேசிகளாலும், அந்த அலைகளைப் பரப்பும் கம்பங்கள் உள்ள இடங்களுக்கு அருகில் வாழ்வதாலும் - பெரிய பாதிப்புக்கள் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளனர். ஆனால், முழுமையான ஆய்வுகள் மேலும் தேவை என்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். பிரித்தானியாவில் 40 மில்லியன் கையடக்கத் தொலைபேசிகள் பாவனையிலுள்ளன. கூடுதலானவை சிறுவர்களே பாவித்து வருகின்றனர். சிறுவர்களின் மூளை முழுமையான வளர்ச்சி அற்றனவாகக் காணப்படுகின்றன. மேலும் அவர்கள் மண்டை ஓடு (SKULL) மிகவும் மெல்லியதாகவும் அமைந்துள்ளன. ரேடியோ அலைகள் இலகுவில் மூளைக்குள் செல்லும் வாய்பபுள்ளதாக ஆரம்பததில் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான சாத்தியங்கள் அதிகம் இல்லையென ஆயவில் அறியப்பட்டுள்ளது. மேலும் கையடக்கத் தொலைபேசிக்கு வேண்டிய அலைகள் பரப்பும் உயர்ந்த மின் கம்பங்களின் அருகில் வீச்சுமிக்க கதிரியக்க அலைகளின் தாக்கம் உண்டு என்பதையும் மறுத்துள்ளனர்.

# மிருகங்களின் தொற்றுநோய்கள்



எபோலா எனப்படும் வைரஸின் தாக்கத்தினால் கொல்லப்பட்ட மிருகங்கள் - மக்களுக்கு அந்த நோய் தொடர்பான ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளது.

அண்மையில் "கபோன்", "கொங்கோ" ஆகிய நாடுகளில் இந்த நோய் மனிதர்களிடம் தொற்றியபோது, மிருகங்களின் எண்ணிக்கையும் அதிகளவில் குறைந்து காணப்பட்டது. "எபோலா" வெவ்வேறு வகையான கிருமிகள் மூலம் மிருகங்களைத் தாக்கியுள்ளதாகவும், குறிப்பாக 'சிம்பன்சி' கொரில்லா போன்ற மனிதக்குரங்குகளும், சில வகையான மான்களும் தாக்கப்பட்டிருந்தன.

'எபோலா' நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களில் 90 வீதமானவர்கள் மரணமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோயாளி உள்ளக இரத்தப் பெருக்கினால் மரணமடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நோயைத் தடுப்பதற்கான மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மேலும் கொங்கோ, கபோன் போன்ற பிரதேசங்களில் இந்த மிருகங்களை மனிதர்கள் பாவிப்பதாலேயே, குறிப்பாக வேட்டைக்காரர்கள், கிராமவாசிகள் இந்த மிருகங்களுடன் தொடர்புகள் வைத்திருந்ததாலேயே மனிதர்களுக்கு ஏபோலா நோய் தொற்றிக்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர்.

# வாரம் ஒரு யோகாசனம்



## நேதி

ஒரு சாண் நீளமான முடிச் சில்லாத சீலைத்துணியை வலது நாசியில் செருகவேண்டும். ஒரு நுனியைக் கையால் பிடிக்கவேண்டும். வேகமாக நான்கு தடவை மூச்சை இழுக்கவேண்டும். பின் துணியை இழுக்க வேண்டும். இடது நாசியினுள் சொருகவேண்டும். நான்கு தடவை மூச்சை இழுக்கவேண்டும். இப்படி இரண்டு நாசித்துவாரங்களையும் இரண்டு முறை மாற்றி மாற்றி சுத்தம் செய்யவேண்டும். பத்து நாட்களுக்கு ஒரு தடவை காலையில் மட்டும் செய்யவேண்டும்.

**நன்மைகள் :** மூக்கடைப்பு, மண்டைச்சளி, கண், காது, இருதயநோய், காசநோய், ஆஸ்துமா என்பன குணமாகும் அரும்பெரும் பழங்கால மருந்து.

*தருபவர்* - மா.மகாநேசன்.

# விசித்திரப் பறவை



அல்பேற்றொஸ் (ALBATROSS) எனப்படும் நெடுந்தூரம் பறக்கக்கூடிய கடல் பறவை - ஒவ்வொரு ஆண்டும் இலை துளிர்காலத்தில் நியூசிலாந்துக்குத் தெற்குப் பக்கமாகவுள்ள நீண்ட கடலைக்கடந்து, வந்து அடைகின்றன. இவை திரும்பவும் வந்தடைந்துள்ளன என்பதை அடையாளப்படுத்துவதற்கு நியூசிலாந்திலுள்ள தேவாலய மணிகள் ஒலித்து இவற்றின் வருகையை வெளிப்படுத்துவது ஒரு வழக்கமாகும்.

இந்தப் பறவைகள் தற்போது அழிந்துபோகும் நிலைக்கு மாற்றப்படுவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

பிரித்தானிய கடலோடியான ஜோன்றிக்பே என்பவர் இந்தப் பறவை தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

இவரது மனைவியும் இணைந்து ஸ்கொட்லாந்தில் ஜூலை மாதம் இந்தப் பறவை செல்லும் பாதை வழியே தமது பிரயாணத்தை கடல் மார்க்கமாக ஆரம்பித்திருந்தனர்.

நீண்ட வலைகளைக் கடலில் மீன்பிடிப்பதற்கு பாவிப்பதால் இந்தக் கடல் பறவைகள் மீன்களை தேடிச் செல்லும்போது, வலைகளுக்குள் சிக்கி உயிரிழப்பதாகவும் "ஜோன்றிக்பே" தெரிவித்தார்.

மேலும் இந்தப் பறவையினத்தின் வாழ்விடம் சிதைகப்படுவது, கடல் அசுத்தமடைதல், இந்தப் பறவைகள் வாழும் இடங்களில் பூனைகளை வளர்த்தல் என்பன இந்த இனப் பறவைகள் அருகிவருவதற்குக் காரணமாக அமைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சமன் — மீன்



சமன் (SALMON) எனப்படும் மீன் இனம் அதிகளவில் மீன் வளர்ப்புப் பண்ணைகளில் (AQUA CULTURE) மூலம் வளர்க்கப்படுகின்றன. ஸ்கொட்லாந்தில் இந்தவகையான பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன.

அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வுகளின் பின் இந்த வகையான மீன்களில் புற்றுநோய் ஆபத்தை விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும், மாதமொன்றிற்கு ஸ்கொட்லாந்தில் வளர்க்கப்படும் சமன மீன்களை, 2 அவுன்சிற்கு மேல் உண்ணக்கூடாதென அமெரிக்க விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்திருந்தனர்.

அமெரிக்காவின் அறிக்கை - மக்களைத் தவறாக வழிநடத்த முற்படுவதாக ஸ்கொட்டிஷ் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தகரத்தில் அடைத்து விற்பனை செய்யப்படும் மீன் இனங்களில் "சமன்" கூடுதலாக காணப்படுகின்றது.

பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன்களின் உணவாக அரைத்த (GRIND) மீன்களையே கொடுத்து வருகின்றனர்.

மேலும் அரைத்த மீன்களில் காணப்படும் நஞ்சுப்பொருட்கள் (TOXIN) நேரடியாக மீன்களின் உடலில் செறிவடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறு நீரகம்

சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்கள் - இரத்தத்தில் காணப்படும் சிறுநீரை உடலிலிருந்து வெளியேற்றமுடியாத நிலையில் காணப்படுவர். இவற்றை நீக்குவதற்குச் செயற்கை முறையில் டயலைசிஷ் (DIALYSIS) எனப்படும் கருவி மூலம் வெளியேற்றுவார்கள்.

பிரித்தானியாவில் 30,000 இற்கும் மேற்பட்ட சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் அரைவாசியினர் டயலைசிஷ் எனப்படும் கருவியின் மூலமே சிறுநீரை உடலிருந்து வெளியேற்றுகின்றனர். மேலும் 20,000 நோயாளிகள் பிரித்தானியாவில் சிறுநீரகம் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் அரைப்பங்கினர் சிறுநீரகங்கள் மாற்றீடு செய்துள்ளனர். மிகுதியான நோயாளிகள் டயலைசிஷ் கருவிகளிலே தங்கியுள்ளனர். பொதுவாகச் சிறுநீரகப் பாதிப்புள்ள ஒரு நோயாளி- வாரத்தில் 3 முறைகளும் - ஒவ்வொரு முறையும் 4 மணிநேரம்வரை சிறுநீரினை உடலிலிருந்து வெளியேற்றுவதற்குத் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதிய திட்டப்படி இந்த வகையான உபகரணங்கள் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பல இடங்களில் நிறுவுவதன்மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் திட்டமிட்டுள்ளார்கள்

விவசாயம் - சர்வேஸ்



# பன்முகப் பயன்மிக்க தூறல் நீர்ப்பாசன முறை...

தற்பொழுது புதிதாக ஒரு நீர்ப்பாசன முறை அறிமுகம் செய்துவைக்கப்பட்டிருக்கிறது. தூவல் நீர்ப்பாசனம் என்பதே இதற்கு வைக்கப்பட்ட பெயர் ஆகும்.

நேரத்தை மீதப்படுத்தக்கூடியதாக இருப்பதோடு இந்த நீர்ப்பாசன முறை மூலம் பல்வேறு பயன்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.

எமது முன்னோர்கள் தொடக்கம் இன்று வரையும் எமது விவசாயிகள் பாத்தி நீர்ப்பாசன முறையை பின்பற்றிவந்தனர். தற்போது அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ள இந்த நீர்ப்பாசனத் திட்டத்தின்மூலம் பல்வேறு நன்மைகளையும் பயிர்ச்செய்கையைப் பொறுத்தளவில் மட்டுமல்லாது வேறுபல வழிகளிலும் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

நிலத்திற்குக் கீழான குழாய்களையும், நிலத்திற்கு மேல் அமைந்துள்ள நீர்ச்சுழிகளையும் பயன்படுத்தியே தூவல் முறை நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுகிறது.

ஒரே நேரத்திலேயே பல பரப்புக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் செய்துகொள்ளக்கூடியதாக இருப்பதனால், நேரத்தை வெகுவாக மீதப்படுத்திக்கொள்ளமுடிகிறது.

வெங்காயம், கோவா, கரட், மிளகாய் போன்ற வகையான பயிர்களுக்கு இந்த முறைமூலம் இலகுவாக நீர்ப்பாசனம் செய்ய முடியும். இந்த நீர்ப்பாசனமுறையை பயன்படுத்துவதன்மூலம் அதிகளவான விளைச்சலையும் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

கிருமிநாசினிகள், உரவகைகள் என்பவற்றைப் பிரயோகிப்பதன் காரணமாக சூழல் வெகுவாக மாசடைந்துவருவதாக அண்மைக் கால ஆய்வுகள் அதிர்ச்சித் தகவல் அளிக்கின்றன.

விவசாயத்துறை நடவடிக்கைகளின் மூலமாகவே அதிகளவான பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும், இதனால், மண்வளம் மட்டுமல்லாது நிலத்தடி நீரும் மாசடைந்துவருவதாகவும் விவசாயிகள் மீது பலதரப்பினரும் தமது குற்றங்களைச் சுமத்தியிருக்கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து விவசாயிகள் தப்பித்துக்கொள்வதற்கு இந்த நீர்ப்பாசன முறை வழிசெய்துகொடுக்கிறது.

பாத்திமுறையிலான நீர்ப்பாசனத்தினுள் உரவகைகள், மருந்துவகைகள் என்பவற்றைப் பயிருக்கு விட்டுவிட்டு நீரை நிரம்பக் கட்டுவதனால், அவை முற்றாகக் கரைவடைந்து நிலத்தடி நீரோடு சென்று கடந்துவிடும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

ஆனால், தூவல் முறை நீர்ப்பாசனம் போதியளவு நீரை மட்டுமே பயிருக்கு வழங்குவதன் காரணமாக உரவகைகளும் அந்த நீரில் கரைந்து இந்தப் பயிரினால் முற்றாக உறிஞ்சக்கூடியதாகவுள்ளன. நிலத்திற்குக் கீழே ஊறிச்சென்று நிலத்தடி நீரோடு கலக்கும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவுள்ளன.

வெங்காயம் போன்ற பயிர்வகைகள் வேர்களில் நீளமும் மிகக்குறைவாகக் காணப்படுவதால், நிலத்தில் அதிக ஆழத்தில் ஊறிஞ்செல்லும். பசளைகளை அவற்றால் உறிஞ்சமுடியாது போய்விடுகிறது.

இதனால் கூடியளவு பணத்தைச் செலவழித்தும் குறைந்தளவு விளைச்சலையே பெற்றுக்கொள்ள முடிகின்றது. இது எமது குடாநாட்டு விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாக ஒருபோதும் இருக்கமுடியாது.

எனவே, இவற்றைத் தடுக்கும் நோக்கத்துடன் குறைந்தளவு காணியிலேயே கூடியளவு பயிர்செய்கையை மேற்கொள்ளக்கூடிய விதத்திலுமே தூவல் நீர்பாசன முறையை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. நிலத்துக்கு கீழான குழாய்கள் மூலம் வரும் நீரானது சுழலிகளை அடைந்து பின் பயிருக்கு விசிறப்படுகிறது. இவ்வாறான முறை மூலம் நீர்விசிறப்படுவதால் இந்த நீருடன் கலந்து மருந்துவகைகளையும், களைநாசினிகளையும், பயிருக்கு விசிறக்கூடியதாக இருப்பதோடு சம அளவிலும் எல்லாப் பயிர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக செய்யமுடிகிறது. இவ்வாறான பல நன்மைகளைக் கொண்ட இந்தத் தூவல் நீர்ப்பாசன முறையை அநுராதபுரத்தில் உள்ள "இரிடெக்" எனும் தனியார் நிறுவனமே செய்து வந்துள்ளது.

குடாநாட்டிலும் இந்த நீர்ப்பாசனப் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் இணுவில் பகுதியில் கிளையொன்றை அமைத்தும் செயற்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்கு சில நீர்பாசனத்திட்டத்தை மேற்கொள்வதற்கான கடனுதவியை ஹற்றன் நஷனல் வங்கி வழங்கி வருகின்றது. மானிய அடிப்படையிலான இந்தக் கடனுதவியை எதுவித பாரபட்சமும் இன்றி அனைத்து விவசாயிகளும் பெறக்கூடியதாக உள்ளது.

ஆயிரம் கன்று என விவசாயிகளால் குறிப்பிடப்படும் 5 பரப்புக்காணிக்கு நீர்பாசனத் திட்டத்தை மேற்கொள்வதற்கு 20,000 ரூபா செலவாகிறது. ஆனால் இரு மணி நேரத்திற்கு மேலாக செலவாகும் இந்தக் காணிக்கான பாத்தி முறை நீர்பாசனத்திற்கு பதிலாக 20 நிமிடத்திலேயே தூவல்முறை மூலம் நீர்பாசனத்தை மேற்கொள்ள முடிகிறது.

அத்தோடு வேலை ஆட்களுக்கான செலவும் வெகுவாக மீதப்படுத்தப்படுகின்றன. குழாய்களின் திருகிகளை திருகுவது மட்டுமே விவசாயிகளின் வேலைகளாக இருக்கின்றதே தவிர வேறு எதுவும் நீர்பாசனத்தைப் பொறுத்தவரையில் விவசாயி மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை.

நீர்பாசனத்தை ஆரம்பித்து விட்டு வேறு வேலைகளில் ஈடுபடக்கூடியதாக இருப்பதால் பலமணி நேரங்களை மீதப்படுத்தப்படக்கூடியதாக இருக்கின்றது. பனியினால் பயிர்கள் மாசடையும் வாய்ப்புக்கள் உள்ளதால் இந்தத் தூவல் நீர்பாசன முறையினை பயன்படுத்துவதன் மூலம் அதனையும் தடுக்க முடிகிறது.

மேலிருந்து கீழ்நோக்கி நீர், மழைதூறுவது போன்று பாய்ச்சப்படுவதால் பனிநிரானது பயிரில் இருந்து கழுவப்பட்டுச் செல்கின்றது. இதனால் பனி மூலம் பயிரில் ஏற்படும் முளைகருகல், நுனி அழுகுதல் போன்ற விளைவுகளை தடுக்கமுடிகிறது. ☆

சமகால அரசியல் பகுதி - I - எஸ்.ஜெயா

# இலங்கையின் கட்சி அரசியலில் தலைமைத்துவத்தின் உளத்தாக்கம்

**இத்தகைய செல்வாக்கானது காலப் போக்கில் விரிசலடைந்து ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்ததுடன் மீண்டும் தேர்தல் நடைபெற்று UNP யை பிரதான கட்சியாகக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி எனும் ஒரு கூட்டாட்சி முறைக்கு இட்டுச் சென்றது.**

இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலைத் தோற்றப்பாடு - அதன் தலைமைத்துவ முரண்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையின் போக்கு அமைகின்றது. இதற்காக நாம் இலங்கையின் அரசியல் அபிவிருத்தியில் அரசியல் கட்சிகளின் பங்களிப்பபை முதலில் நோக்குதல் வேண்டும்.

டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுக்கு அமைய இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னரே அரசியல் கட்சிகளின் தோற்றப்பாடுகளைக் காணமுடிகிறது. 1935 இல் தோற்றம் பெற்ற LSSP என்ற கட்சியே இலங்கையின் முதலாவது கட்சியாக கருதப்படுகிறது.

எனினும் ஓர் ஒழுங்கமைப்புக்குட்பட்ட அரசியல் கட்சியின் வளர்ச்சி முறைப்போக்கானது 1947 இன் பின் அதாவது 'கெபினெட்' அரசாங்க முறையினை சோல்பெரி குழு வழங்கிய பின்னரே காணலாம்.

அரசியல் அமைப்பின் கீழ் இலங்கையின் அரசியல் கடசிகளின் தோற்றத்தினை வரையறை செய்வதற்கான வழிமுறைகள் கொடுக்கப்படவில்லையெனலாம். இதனால் இலங்கையில் பல கட்சிமுறை தோன்ற வழிவகுத்தது.

குறிப்பாக சுதந்திரத்தின் பின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கடசிகள் பத்திற்கு காணப்பட்டதோடு 1989 இல் பொதுத்தேர்தலின் போது அது 23 ஆக உயர்வு பெற்றது எனலாம். அத்தோடு இவை இன்று 35 இற்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட 'கட்சிகள் தோன்ற வழி வகுத்தன.

இதனடிப்படையில் நோக்குகையில் இலங்கையானது பல கட்சிமுறையுடைய ஒரு நாடு என்பதை எடுத்துக் காட்டுகிறது. எனினும் இலங்கையில் அரசாங்கம் அமைக்கப்படும் போது இரு கட்சிகளின் தனித்துவப் போக்கின் செல்வாக்கினை அவதானிக்கமுடிகிறது.

ஐக்கிய தேசியக்கட்சி (UNP), சிறீலங்கா சுதந்திரக்கட்சி (SLFP) ஆகிய இரு கட்சிகளுமே இறந்தகாலத்தில் பிரதானமான ஆட்சி அமைக்கும் கட்சிகளாகக் காணப்பட்டன.

எனினும் இவை காலப்போக்கில் ஏற்பட்ட தலைமைத்துவ உளத்தாக்கமானது இக்கட்சிகளின் உறுதியான அடித்தளத்தினைத் தகர்த்து கூட்டுக்கட்சிகளின் உதவியை நாடவைத்தது.

இத்தாக்கமானது இன்று மட்டுமல்லாது ஐ.தே.க. அரசமைத்த 1947 -1956 மற்றும் 1965 - 1970 கால கட்டங்களிலும் SLFP ஆட்சியமைத்த 1956-1960 மற்றும் 1970-1977 ஆகிய கால கட்டங்களிலும் தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறு தோற்றம்பெற்ற கூட்டாட்சி முறைப் போக்கானது 1944 இல் பதவிக்கு வந்த SLFP கட்சியானது பொதுஜன ஐக்கிய முன்னணியின் பெரும் செல்வாக்குச் செலுத்தியதெனலாம்.

இத்தகைய கூட்டாட்சி முறைப்போக்கின் அழுத்தமும் இருபெரும் தலைமைத்துவ முரண்பாடும் ஒனறு சேர்ந்து தமிழர் தலைவிதியுடன் விளையாடும் ஒரு சூழ்நிலைப் போக்கே இன்றைய இலங்கையின் தலைமைத்துவ உளத்தாக்க விளைவாகும்.

இத்தகைய விளைவுக்குரிய ஆரமபகால காரணங்களை நோக்குகின்றபோது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஆடசிக்கு முற்பட்ட (1994) கடந்த 17 ஆண்டுகளாக UNP கட்சியே அதிகாரம் மிக்க கடசியாக விளங்கியது.

1977-1999 வரை உள்ளூராட்சி தேர்தலில் 50% அதிகமான வாக்குகளைப் பெற்று தொடர்ந்தும் அதிகாரத்திலிருந்து வந்தது. இதனால் இதன் வெள்நாட்டுக் கொள்கையிலும் ஓர் உறுதிப்பாடு நிலவிவந்தது

UNP கட்சியானது முதலாளித்துவம் சார் கொள்கைகளையே பின்பற்றியதால் இலங்கையில் முதலாளித்துவம் சார் அரசியல் அபிவிருத்தியும் ஏற்படலாயிற்று. இத்தகைய ஒரு போக்கானது அமெரிக்கத் தலையீட்டினை இலங்கையில் படிப்படியாக நுழையவைத்தது.

இதற்கு பிரதானமாக UNP அரசின் கொள்கைகளும் SLFP கட்சியின் தலைமைத்துவ போராட்டமுமே பின்னணியாகின. இத்தகைய பின்னணியானது மேற்கத்திய பொருளாதாரத்தினூடாக ஊடுருவிய அமெரிக்காவின ஏகாதிபத்திய தந்திரமுறையின் ஆரம்ப நகர்வினையே எடுத்துக்காடடியது எனலாம்

ஏனெனில் SLFP இல் தொடங்கிய தலைமைத்துவப் போராட்டமானது தொடர்ந்து UNP ஐ 1992 இல் தாக்கியது எனலாம். இதன் விளைவாக UNP கட்சியிலிருந்து ஒரு பகுதியினர் பிரிந்துசென்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எனும் புதுக்கட்சியை ஆரம்பித்தனர்.

இந்நிலையிலிருந்தே அன்னிய சக்திகள் இலங்கையில் வலுவான இரு கட்சிகளின் செயற்பாடுகளில் ஊடுருவலை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் ஸ்திரமற்ற ஓர் தன்மையினை உருவாக்கி தமக்கு ஏற்றதளமாக இலஙகையினை மாற்ற முனைந்தன என்றால் மிகையாகாது.

இதற்காகவே அச்சக்திகள் முதலீடு என்றும் உதவி என்றும் உள்நுழைந்து இன மத வாதங்களை தூண்டியதோடு மேற்கத்தேய கலாச்சார பண்புக்குள் மக்களை உள்நுழைக்க முனைந்து வெற்றியும் கண்டன. இதற்கு ஏதுவாக 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

இவ்வாறு 1978 இல் அறிமுகமான அரசியல் யாப்பே இன்றைய அரசியல் சூழ்நிலை தோற்றப்பாடடிற்கு முக்கிய காரணமாகும். அத்தோடு நாட்டில் இனப்பூசல்களைத் தூண்டிவிட்ட பெருமையும் கொண்டுள்ளது. இதற்கு ஜே.ஆர் இன் தலைமைத்துவ ஆதிக்க செயற்பாடும் பிரதான் காரணமாகும்

இங்கு தலைமைத்துவம் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். சமகால உலகமானது தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு குறித்து நோக்க வேண்டிய கட்டாயப்பாட்டினைக் கொண்டுள்ள தெனலாம்.

தேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சமுதாய கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை சிறப்புறச் செய்யவும் உடல் உள வலுக்களை வளர்த்தெடுக்கவும் தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு முக்கியம் பெறுகிறது.

இந்தவகையில் சில அடிப்படைகளை முதன்மையாகக் கொண்டே தலைமைத்துவ வகையீடு செய்யப்படுகின்றது. அதாவது தோற்றம், தேவை, இயல்பு, பயன்பாடு, குழுத் தொடர் என்பன முக்கியம் பெறுகின்றன. இதனடிப்படையில் மனித சமூகமானது தேவைகள் ஏற்படுகின்றபோது தலைமைத்துவத்தினை உருவாக்கிக்கொள்ளும் 'வேட்கைத் தாராண்மியத்தை' இயல்பாகவே கொண்டுள்ளன.

இந்த வகையில் இன்று உலகின் கவனத்தையே இலங்கை நோக்கி ஈர்த்திருக்கும் ஓர் சூழ்நிலையில் தலைமைத்துவமாக பிரபாகரன், சந்திரிகா, ரணில் எனும் முத்தரப்புத் தலைமைகளும் அமைகின்றன.

இந்த ஒவ்வொரு தலைமைத்துவமும் சமூகத்தில் ஏற்படுத்தி நிற்கும் விளைவுகளை நோக்குவோமாயின் - இங்கு கடும்போக்கு அதிகார தலைமைத் துவத்தினை எடுத்துக் கொண்டால் சகல அதிகாரங்களையும் தனதாக்கி தீர்மானங்களை எடுக்கும்போது தன்னிச்சையாகவே தன்போக்கிலேயே எடுத்துக் கொள்வதுடன் தலைமைத்துவம் எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றிவைக்கவேண்டும் என்ற பிடிவாத போக்கும் காணப்படும்.

இவை அனேகமாக சர்வாதிகார அரசுகளில் காணலாம். (உதாரணமாக - ஹிட்லர், சதாம் ஹுசேய்ன்). ஆனால், இவை இன்று எமது நாட்டில் காணப்பட்ட அரசியல் சட்டவரைபினைப் பயன்படுத்தி ஜனநாயகரீதியாகத் தோற்றம்பெற்ற தலைமையான சந்திரிகா அம்மையார் இத்தகைய தலைமைத்துவப் பண்பினைத் தமக்குள் உள்வாங்கியதைக் காணலாம்.

அதாவது - 'ஜனநாயகப் போர்வைக்குள் ஒளிந்திருக்கும் சர்வாதிகாரியாக' இன்று சந்திரிகா அம்மையார் தொழிற்படுகின்றார். இதற்கு இவரது அரசியல் பின்னணியும் அவரது கவர்ச்சி முறை அரசியல் தோற்றப்பாடுகளுமே காரணமாக அமைகின்றன.

வெளிநாடுகளில் சட்ட மற்றும் பட்டப் படிப்புக்களை கற்ற சந்திரிகா கால சூழ்நிலையால் பரம்பரைவாத அரசியல் கவர்ச்சியினால், பொது ஜன ஐக்கிய முன்னணி எனும் கூட்டுக் கட்சிகளின் தலைமையை ஏற்க நேரிட்டது. இதன்வாயிலாக முதலமைச்சராகவும் பின், பிரதம மந்திரியாகவும் இன்றைய ஜனாதிபதியாகவும் தலைமைதாங்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

இந்தச் சந்தர்ப்பத்தினை நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்த சந்திரிகா சமாதானப் புறாவைப் பறக்கவிட்டு தனக்குரிய 'தனிமனித பக்தியை' மக்களிடையே அதிகரிக்கச் செய்தார்.

இதனால், கர்வம் கொண்ட அவர் சமாதானப் புறா நோக்கி தனது துப்பாக்கியினை முழங்கவிட்டதோடு, 'சமாதானத்துக்கான யுத்தம்' என்னும் புது அகராதியினையே உலகில் தோற்றுவித்தவர் ஆவார்.

இதன்விளைவாக இவருடைய கட்சிக்கான ஆதரவு வீழ்ச்சியடையவே நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு வி.என்.பி. தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி எனும் கூட்டணி அரசு, ரணிலை தலைமையாகக் கொண்டு பதவியேற்றது.

ஆனால், இன்று சமாதானம் என்ற பாதையில் இரு தலைமைத்துவமும் முரண்படத் தொடங்கியுள்ளன. இதற்குப் பிரதான காரணமாக நாட்டின் நிறைவேற்று அதிகாரம் ஒருவருடைய கையிலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இன்னொருவரின் கையிலும் இருந்தமையால், அதன் சீரான செயற்பாடு தடைப்பட்டுப்போனதெனலாம்.

இத்தகைய இடர்பாடுகள் நீடிக்குமாக இருந்தால், இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி இனவாதக் கட்சிகள் முன்னணி பெற வாய்ப்புண்டு. இவ்விரு கட்சிகளின் உடைவைத் தொடர்ந்தே, ஜே.வி.பி. கட்சியானது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், குறிப்பிடத்தக்க இடத்தைப்பெறும் சூழ்நிலை உருவாகியது.

ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகள் இத்தகைய அரசியல் ஸ்திரமின்மையைப் பயன்படுத்தி தம்மை வலுப்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

(...தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

## நமது நோக்கு

# சந்தேகத்தைத் தரும் சந்திரிகாவின் ஆராய்ச்சி

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு - விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுவந்த அமைதிப் பேச்சுவார்த்தை மேலே நகரமுடியாத ஒரு நெருக்கடி நிலையை எட்டியுள்ள இந்தநிலையில், அதன் எதிர்காலம் குறித்த சந்தேகமும் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டே போகின்றது.

சமாதான முயற்சிகளுக்குத் தடையாகவுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆழமாக ஆய்வுசெய்யும் வேளையில், அதற்குப் பிரதான தடையாகத் தற்போது இருப்பதும், நிரந்தரத் தடையாகத் தொடர்ந்து இருக்கப்போவதும் இலங்கையில் தற்போது அமுலிலிருக்கும் அரசியல் யாப்புத்தான் என்பதை புரிந்துகொள்ளமுடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்தில் உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமையினை முதன்மைப்படுத்தும் தற்போதைய ஆட்சியமைப்பு நிர்வாகத்தின் சட்ட விதிமுறைகளை உள்ளடக்கிய அரசியல் யாப்பு, ஜனநாயகத்தின் சகல அம்சங்களையும் வெகு நுட்பமாக நிராகரித்து, ஒரு சர்வாதிகார சித்தாந்தத்தையே நடைமுறைக்குக் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

அனைத்து அரசியல் நிர்வாக அதிகாரங்களையும் ஒரே இடத்தில் - அதாவது ஜனாதிபதியிடத்தில் குவி மையம் கொள்ளவைத்த அந்த அரசியல் யாப்பு - கிட்டத்தட்ட இரு தசாப்தத்திற்கும் அதிகமான கால இலங்கையின் வரலாற்றை அவலம் தரும் சொற்களை இரத்தத்தில் தேயத்து எழுதியதொன்றாகிவிட்டது.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா தனக்கு மக்கள் அளித்த அபரிமிதமான செல்வாக்கினை - வாக்கினை - தன்னை ஒரு சர்வாதிகாரியாக மாற்றிக்கொள்ள அளித்த அங்கீகாரமாகவே கருதிக் கொண்டார் என்றே கூறவேண்டும். 1977 இல் நடைபெற்ற அந்த விபத்து, அதாவது ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆட்சிப்பொறுப்பை ஏற்ற சம்பவம், இலங்கையின் சிறுபான்மை சமூகத்தவர்களை உரிமையற்றவர்களாக்குவதற்கு வழிவகுப்பதாக அமைந்ததுடன், அவர்களுக்கெதிராக ஒரு நியாயமற்ற யுத்தத்தை அவர் பிரகடனம்செய்யவும் வைத்தது.

இலங்கையை ஒரு பௌத்த சிங்களக் குடியரசாக பிரகடனம்செய்யும் பேரினவாதிகளின் பெருவிருப்பை நிறைவேற்றமுயன்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சிறுபான்மை மக்களைக் குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களை வந்தேறு குடிகளாக அடையாளப்படுத்த, அடிமைப்படுத்த எடுத்த முயற்சிகள் ஏராளம்.

ஆனாலும் அவரால் தமிழ்மக்கள் மீது ஒரு வெறித்தனமான போரைத் திணிக்கமுடிந்ததேயொழிய, தமிழ் மக்களை முற்றாக அழிக்கமுடியவில்லை. அதேபோல் அந்தயுத்தம் காரணமாகச் இலங்கை அடைந்த, அடைந்து வருகின்ற அனைத்து இழப்புக்களுக்கும் அவரே முழுமுதற் காரணியாகவும் அடையாளமிடப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து அந்த பதவிக் கதிரையில் அமர்ந்த இலங்கையின் ஜனாதிபதிகள் அனைவருமே, அவரது அடிகளை இன்னும் ஆழமாகவும், அழுத்தமாகவும் பதிக்கவே செய்தனர்.

சந்திரிக்காவும் இதற்கு விதிவிலக்கல்ல. சமாதான முயற்சிகளை எந்தவகையிலும் விரும்பாத சந்திரிகா - தான் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைமூலம் அதற்கு நிரந்தரமாகவே ஆப்புவைத்தார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபினை, தனிநாட்டுக்கான முன்னோடி வரைபு என்றும் அவரது கட்சிக்காரர்கள் கடுமையாக விமர்சித்தார்கள்.

ஆனால், இப்போது அந்தத் திட்டவரைபு குறித்து சட்ட ஆலோசகர்களுடன் ஆராய்வு செய்கிறாராம்.

சர்வதேச அரசியல் சட்டநிபுணர்கள், ஆலோசகர்கள் பலருடன் கலந்தாலோசித்து, அவர்களின் அங்கீகாரத்துடன்கூடிய ஒரு இடைக்கால நிர்வாகசபைக்கான நியாயமானதும், அவசியமானதுமான திட்டவரைபையே விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருந்தனர் என்பது வெளிப்படையானதாகும்.

அதனை முறையாகப் படித்திராது, கண்டபடி கருத்துக்களை வெளியிட்ட பின்னர், இப்போது சர்வதேச அழுத்தம் காரணமாக அந்த திட்டவரைபைத் தன் சட்ட ஆலோசகர்களுடன் ஆராயமுற்பட்டிருப்பது அவரது உறுதியற்ற தன்மையையே, சந்தர்ப்பவாதப் போக்கையே வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அதிலும் இந்த ஆலோசனைக்குழுவில் இந்திய சட்ட ஆலோசகர்களையும் இணைத்துக்கொண்டுள்ளமையானது, மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்கிறது.

இந்திய இராஜதந்திரிகள் சிலர் ஏற்கனவே இந்தத் திட்டவரைபினைத் தமது தேச அபிலாஷைகளுக்கு ஏற்புடையதல்ல என, வெளிப்படையாகவே நிராகரித்துள்ளமை தெரிந்தவிடயமே.

இந்தநிலையில் சந்திரிகாவின் இந்த ஆராய்வு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்கும் தன்மை கொண்ட ஒரு முடிவைத்தரும் என்பது சந்தேகமே...

சந்திரிகா எக்காலத்திலும் தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய ஒருவராக இருந்ததில்லை என்ற வரலாற்றுப் பாடமும் இந்தச் சந்தேகத்துக்குக் காரணமாகும்...

## நாடும் நடப்பும்




# காணாமற் போனோரின் வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஆட்சேபனை மனு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை!

## அரசதரப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஆட்சேபனை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்குப் போதிய கால அவகாசத்தை தரும்படி அரசதரப்பு கோரியுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்குப்பின் படையினரால் கைதாகி காணாமற்போன எட்டுப்பேர் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடைபெற்றன. இதன்போதே, அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமியால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோரின் நிலை தொடர்பான விசாரணைகள் மீதான ஆட்சேபமனுவை, அரசதரப்பு சமர்ப்பிக்க அனுமதிக்கவேண்டுமென முன்பு நடைபெற்ற விசாரணைகளின்போது கோரப்பட்டது. அதற்கான அனுமதியையும் நீதிவான் அளித்திருந்தார்.

இந்தநிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று நடைபெற்றபோதே, சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபனை மனுவைச் சமர்ப்பிக்க கால அவகாசம் தேவைப்படுவதாகக் கோரிக்கை விடுத்திருந்தது. இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான், வழக்கு விசாரணைகளை அடுத்த மாதம் 23 ஆம் திகதி ஒத்திவைத்தார். நேற்று நடைபெற்ற விசாரணைகளின்போது - நாவற்குழியைச் சேர்ந்தவர்களான கே.புஸ்பராசா, சி.சிவகுமார், ஏ.கோடீஸ்வரன், ஏ.திலகரட்ணம், கைதடியை சேர்ந்தவர்களான சி.திருவருட் செல்வன், பி.ரவீந்திரன், மட்டுவிலைச் சேர்ந்தவர்களான மு.ஜெயரட்ணம், மு.சிவராசா ஆகியோரின் வழக்குகளே எடுத்துககொள்ளப்பட்டன.

இந்த விசாரணைகளினபோது, முறைப்பாட்டாளர்களின் சாரபில் சட்டத்தரணி றெமிடியஸ், அரசதரப்பில் சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி, இராணுவத்தினர் சார்பில் இராணுவ சட்ட ஆலோசகர் குறூப் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். இன்றும் மேலும் பத்து காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெறவுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ச)

# இலங்கை அதிரடிப்படை வீரர்களுக்கு இந்தியா - அமெரிக்கா விசேட பயிற்சி

அமெரிக்காவும், இந்தியாவும் - இலங்கையின் அதிரடிப் படையினருக்கு விசேட பயிற்சிகளை வழங்கவுள்ளன.

இது தொடர்பாக அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி விமல்மிதிவைக் அண்மையில் மன்னார், வவுனியா அதிரடிப் படைமுகாம்களுக்கு விஜயம்செயது, அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படை வீரர்களுக்குப் பயிற்சிகளை முழுமையாக வழங்குவதற்கு இரு நாடுகளும் தயாராக இருக்கின்றன. இது தொடர்பாக விரைவில் அதிரடிப்படையினர் விசேட பயிற்சிகளைப் பெறக்கூடியதாக இருக்குமென்றும் அதிரடிப் படை அதிகாரி தெரிவித்தார்.

யுத்தத்தால் 200 இக்கும் மேற்பட்ட அதிரடிப்படை வீரர்கள் பலியானதுடன், 560 பேர் வரை காயமடைந்துள்ளனர். இவர்களின் சேவை யுத்தகாலத்தின்போது, மிகவும் அவசியமானதாக இருந்திருக்கிறது. எனவே, அதிரடிப்படையினை மேலும் விஸ்தரிக்க வேண்டியது அவசியமானது என்றும், இரு நாடுகளில் இருந்தும் பயிற்சியைப் பெறுவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# அரசியல் முறுகலைத் தீர்ப்பதன் மூலமே பொருளாதாரத்தை வளம்படுத்தமுடியும்!

## அஸ்கிரியபீடத்தினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

நடைமுறை அரசியல் முறுகலை உடனடியாகத் தீர்ப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். இதன்மூலமே பொருளாதாரத்தை வளம்படுத்தமுடியும் என அஸ்கிரிய மல்வத்த மகாநாயக்கர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மல்வத்த மகாநாயக்கர்களை ஜனாதிபதி அவசரமாக சந்தித்துக் கலந்துரையாடியபோதே, ஜனாதிபதியிடம் மகாநாயக்கர்கள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

நாட்டின் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள முறுகல்கள் குறித்தும் ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஏற்கனவே பிரதம மந்திரியைச் சந்தித்துக்கொண்ட அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் - ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்பினை ஏற்றவிடயம் பாரதூரமானதாக இருந்தாலும் கூட, நாட்டின் அரசியல் அமைப்புக்கூடாகவே ஜனாதிபதி இதனைச் செய்துகொண்டிருக்கிறார் என்றும், எனவே அரசியல் அமைப்பினை உடனடியாக மாற்றவேண்டும் என்றும் கோரி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளை உடனடியாக நீக்குமாறு மகாநாயக்கர்கள் ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர். (01)

# தடை செய்யப்பட்டிருந்த இடத்தில் நிறுத்தப்பட்ட வாகனங்களை பொலிஸார் எடுத்துச்சென்றனர்

வாகனங்கள் நிறுத்த தடைசெய்யப்பட்ட இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களைப் போக்குவரத்துப்பிரிவுப் பொலிஸார் எடுத்துச்சென்றுள்ளனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வாயிலுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களே நேற்றுப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

வாகனங்களை நிறுத்தவேண்டாம் என எழுதப்பட்டிருந்த விளம்பரங்கள் வைக்கப்பட்டிருந்தபோதும், பொது மக்களில் சிலர் அவற்றைக் கவனியாது, வாகனங்களை நிறுத்தி வருகின்றனர். இது தொடர்பாகப் பொலிஸார் பலதடவைகள் நடவடிக்கை எடுத்தபோதும், எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள தடைசெய்யப்பட்ட இடத்தில் வாகனங்களை நிறுத்துவதனால், அம்புலன்ஸ் வண்டிமூலம் எடுத்துவரும் ஆபத்தான நோயாளிகளை வைத்தியசாலையில் சேர்ப்பது கடினமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. வைத்தியசாலையில் பணிபுரியும் பாதுகாப்பு ஊழியர்கள், இது தொடர்பாக எடுத்துக கூறியும் பொதுமக்கள் கவனத்தில் எடுக்காததனாலேயே, பொலிஸார்மூலம் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு நேற்று உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட 3 மோட்டார் சைக்கிள்களும், இரு துவிச்சக்கர வண்டிகளும் பொலிஸ் நிலையத்தில் வைத்து உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. வாகனங்களைத் தடை செய்யப்பட்ட இடத்தில் நிறுத்தியமைக்காக வாகன உரிமையாளர்கள் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.(ச)

# உங்களின் புத்தாண்டு யோகம் எப்படி?



## துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2 ஆம், 3 ஆம் கால்கள்)*

*எதையும் தாங்கும் இதயமும் துன்பத்தைக் கண்டு தளராத நெஞ்சமுமுடைய துலாராசி நேயர்களே!*

நீங்கள் எல்லோருக்கும் நீதியைக் கூறும் நீதிவானாக இருப்பபீர்கள். நம்பியவர்களைக் கடைசிவரை காப்பாற்றுவீர்கள். தெய்வபக்தியும், பெரியவரிடத்து பற்றும் பாசமும் உடையவராக இருப்பீர்கள். 28.08.2004 வரை குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பல வழிகளிலும் நன்மையைத் தரும். உற்சாகமும் மனோதைரியமும் காணப்படும் குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க எத்தனிப்பீர்கள். எதிர்ப்புக் காட்டுபவர்கள் இறுதியில் உங்களையே தஞ்சமடைவார்கள். வாழ்க்கையில் புதுத்திருப்பங்கள் ஏற்படும். திருமணம் புத்திரப் பேறு போன்ற நற்பலன்களும் கிடைக்கும் நீண்ட நாட்கள் தொடர்பில்லாமல் இருந்த நண்பர்கள் வந்து சேருவார்கள். அரசாங்கமும் வங்கிகளும் உங்களுக்கு நன்மைகளைச் செய்யும் வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும் ஆவணி மாதம் குரு பகவான் விரயஸ்தானத்துக்கு வந்தாலும் உங்களுக்கு நற்பலன்கள் அதிகம் குறையாது. புதுமனை வாங்குதல் புத்தாடை ஆபரணம் வாங்குதல் போன்ற செலவுகளையே தருவார். பிறருடைய பேச்சுக்களை நம்பி வீண் செலவுகளைச் செய்யாமலிருப்பது நன்று எக்கருமத்திலும் நீங்கள் அவசரப்படுவதால் சில துன்பங்கள் வந்து சேரக்கூடும்.

சூரியன் 7 ஆம் வீட்டில் உச்சம் பெறுவதால் உங்கள் வாழ்க்கையிலும் ஒளி வீசும். எதனையும் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். மனைவி மக்கள் ஆகியோர் உங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பார். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தல் போன்ற பலன்களையும் 12 இல் குரு தருவார். தேகாரோக்கியம் பாதிப்படையாமல் இருக்கும்.

### பெண்களுக்கு :

மிகவும் நன்மையான முறையில் புதுவருஷம் ஆரம்பிக்கிறது. ஆடம்பர வீடு அலங்காரப் பொருட்கள் முதலியன வாங்குவதிலும் ஆர்வம் மிகும். திருமணப் பேச்சுக்களும் கைகூடி நல்ல வாழ்க்கையைத் தரும். குடும்ப உறவுகள் பெலமாக இருக்கும். ஆவணி மாதத்தின் மேல் செலவுஸ்தானம் சற்றுக் கூடும்.

### வியாபாரிகள், தொழில் துறையினருக்கு :

உங்களுக்கு வருடத்தொடக்கம் பலவித நன்மைகளைத் தரும். பல நிறுவனங்களின் உதவி கிடைக்கும். வங்கிகளின் உதவிகளும் கிடைக்கும். புதிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும் நன்று. புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். ஆவணி மாதத்தின் மேல் செயல்திறன் சற்றுப் பாதிக்கப்படக் கூடும்.

### உத்தியோகத்தர்களுக்கு

உங்கள் திறமைக்கு ஏற்ற பலன் உண்டாகும். வீடு வாகனம் வேலையாட்கள் போன்ற வசதிகள் உண்டு. மேலதிகாரிகளின் ஆதரவுகளும் பதவி உயர்வுகளும் வந்து சேரும். வசதியான இடமாற்றங்கள் கிடைக்க இடமுண்டு. நீண்ட நாட்களாக நினைத்த பல கருமங்கள் விறுவிறுப்பாக நிறைவு பெறும். விநாயகரை வழிபட்டால் மேலும் நன்மை உண்டாம்.

### அரசியல் வாதிகளுக்கு :

உங்களுக்கு பலரும் ஒத்தாசை புரிவர். மேலும் புதிய பொறுப்புக்கள் வந்துசேரும். ஆவணியின்மேல் போட்டி, பொறாமை எதிர்ப்பு இவைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். எதிர்நீச்சல் போட்டு முன்னேற்றமடையுங்கள்.

### மாணவர்களுக்கு :

போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று முதன்மையாளராக விளங்குவீர்கள். வெளிநாடுசென்று படிக்கும் வாய்ப்புக்கள் உண்டு. கல்வித் துறையில் திருப்பம் ஏற்பட்டு புதிய கல்வியைத் தொடருவீர்கள் வேலை பார்த்துப் படிக்கும் பலனும் உண்டாம்.



## விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை)*

*தமது பணிகளை விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்புடனும் செய்துமுடிக்கும் திறமைமிக்க விருச்சிகராசி அன்பர்களே!*

எதனையும் எளிதில் புரிந்துகொள்ளும் மனப்பான்மையும் வெற்றிகாணும் வரை தொடர்ந்து முயற்சித்து வெற்றிகாணும் தன்மையும், தந்திரமாகக் கருமங்களைக் கையாளும் சுபாவமும் உடையவராக இருப்பீர்கள். பலர் மேடைப் பேச்சாளராகவும், ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும் விளங்குவீர்கள். வருடத் தொடக்கத்தில் அட்டமத்துச் சனியும் வியாழனும் உங்களுக்குத் தொல்லை கொடுக்கும். சில சந்தர்ப்பங்களில் மனம் உடைந்து போகும் அளவிற்கு பிரச்சினைகள் வலுக்கும். அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வ்ரி முதலியனவற்றைச் செலுத்தி விடுங்கள். இல்லையேல் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். தெய்வ வழிபாடு உங்களுக்குக் கைகொடுக்கும். குடும்பத்தினரைத் தவிர எவரிடமும் உண்மையைப் பேசாதீர்கள். சுவர்களுக்கும் காதுகள் உண்டு என்பதைத் தெரிந்துகொள்ளவும். எதற்கும் முன்னெச்சரிக்கை அவசியமாகும்.

துன்பங்கள் வரும்போது மனத்தைரியமும் தன்னம்பிக்கையும் வேண்டும். பிரயாணங்களின் போது விபத்துக்கள் நேரிடலாம். எந்தக் கருமத்திலும் எதிர்ப்புக்கள் வந்துசேரும். சிக்கல்களைத் தவிர்க்க நீங்கள் நிதானமாகவும் தெய்வ சிந்தைனையுடனும் கருமங்களை ஆற்றலாம்.

28.08.2004 இல் குரு பகவான் லாபஸ்தானத்துக்கு வருவார். 05.09.2004 இல் சனீஸ்வரன் மாற்றமடைவார். சோதனைகள், கஸ்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். வாழ்க்கையில் புதுத் திருப்பங்கள் ஏற்படலாம். எனவே, எதிர்காலத்தின் முன்னேற்றத்தை யோசித்து திட்டமிட்டுச் செயற்படமுடியும். மெதுவாக சீராக நடந்துசென்றால் எல்லாம் வெற்றியாக முடியும். பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து பல நற்பலன்கள் கிடைக்கும்.

### பெண்களுக்கு

நீங்கள் யாரையும் எதிர்த்துப்பேசாமல் இருப்பது நன்று. முடிந்தவரை வழிபாடுகளைச் செய்யவும். வேலைக்குச் செல்லும் பெண்கள் ஆண்களுடன் சகஜமாகப் பழகுவதைக் குறைதது்க் கொள்ளவும். பிரச்சினைகள் உருவாகாமல் தவிர்பபதற்கு இது நல்லது. ஆவணி மாதத்தின்மேல் வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

### வியாபாரிகள், தொழில்துறையினருக்கு :

தொழில் துறையில் பெரிய நஷ்டங்கள் ஏற்பட இடமுண்டு. அரசியல்வாதிகளின் தொந்தரவும் இருக்கலாம். அரசாங்க வரி போன்றவற்றைக் காலந்தவறாமல் செலுத்திவிடவேண்டும். லாபம் குறைவாக இருந்தாலும், நஷ்டத்தைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஆவணியின் மேல் வியாபாரங்கள் சிறக்கும். புது முதலீடுகளையும் செய்யலாம். பணமும் சேரும்.

### உத்தியோகத்தர்களுக்கு :

நீங்கள் உயரதிகாரிகளுடன் அனுசரணையாக நடக்கவேண்டும். வேலைப்பழு அதிகமாகவே இருக்கும். அன்றாட வேலைகளைப் பூரணப்படுத்திக்கொள்ள வேண்டும். பல பிரச்சினைகள், புதிய குழப்பங்கள் ஏற்படலாம். வருடப் பிற்பகுதியில் இருந்துவந்த கஷ்டங்கள் எல்லாம் நீங்கும். பலவித நன்மைகளும் உயர்ச்சியும் ஏற்படும்.

### அரசியல்வாதிகளுக்கு :

நீங்கள் நேர்மையாக நடந்தாலும், சமூகம் எதிர்மாறாகவே இருக்கும். ஓரளவு சகிப்புத் தன்மையுடன் செயற்படவேண்டும். எவரையும் பேர் குறிப்பிட்டுப் பேசாதீர்கள். வீண் வம்புகள் வரும். சில பிரச்சினைகள் உங்களைத் தூங்க விடாமல் செய்யும்.

### மாணவர்களுக்கு :

கவனக்குறைவும் வீண்பொழுது போக்கும் உங்களைப் படிக்கவிடாமற் செய்யும். குழப்பம் மிகுந்த நிலையே தொடர்கியது. தேவையற்ற பொழுதுபோக்கைத் தவிர்க்கவும். வருடப் பிற்பகுதியில் நன்மை உண்டு.

---



# நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு கடலக வளக் கல்வி அவசியம்

## கடலக வளம்

உலக நாடுகள் தமது நிறைவான இயற்கை வளங்களைக் கொண்டே தத்தமது பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றன. இலங்கையில் இயற்கை வளங்களில் குறைவடையாத வளம். கடலக வளமாகும். ஆனால், இந்த வளமானது இலங்கையில் இன்றுவரை உரிய முறையில் பயன்படுதத்ப்படுவது இல்லை. நிறைவான இந்த வளம் விரயமாகிறது.

நோர்வே, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் கடலகத்துறையில் நவீன விஞ்ஞானத் தொழில்நுட்ப முறைகளைப் புகுத்தி முன்னேறியுள்ளன. ஆனால், இலங்கையின் கடலகத் துறையில் ஆராய்ச்சிகள், அபிவிருத்திகள் என்பன பெருமளவில் முன்னெடுக்கப்படவில்லை.

## கடலக வளம் சார்ந்த புவியியல் அமைவு

இலங்கையின் அமைவிடம் புவியியல் ரீதியாகவே கடலக வளத்தைக் கொண்டதாகவுள்ளது. நாற்புற கடலிலும், மீன்வளம் கொண்ட அதிக பரப்பளவுள்ள கண்ட மேடைகள், அதிக நீளமுள்ள கரையோரப் பகுதி, அதிக பரப்புடைய கடல் வலயம், பல்லுருவம் சார்ந்த கரையோரப் பகுதி ஆகிய கடலகம் சார்ந்த அமைப்புக்கள் இயற்கையாகவே அமைந்துள்ளன.

சுமார் 120 கிலோமீற்றர் நீளமான கரையோரப் பகுதி (தீவுகள், குடாக்கள் அடங்க) மீன்வளம் நிறைந்த 26 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட கண்ட மேட்டுத் தொகுதி, 200 மைல் நீளமும் 233 ஆயிரம் கிலோமீற்றர் பரப்பளவும் கொண்ட பிரத்தியேக பொருளாதாரக் கடற்பரப்பும் இலங்கையின் சிறப்பம்சமாகும். அத்துடன், அயன மண்டல நாடாகவும் காணப்படுவதால் இங்கு மீன்வளங்கள் அதிகமாகும். இத்தகைய சிறந்த கடலக வள் வாய்ப்பினைக் கொண்டுள்ள இலங்கை, இத்துறைசார் உற்பத்தியில் அதிக வளர்ச்சியை எட்டவில்லை.

## இலங்கையின் உற்பத்திப் போக்கு

இலங்கையின் மீன்பிடி உற்பத்தியை எடுத்து நோக்கினால், 1950 களில் பிழைப்புக்குரிய தொழிலாகவே இருந்துவந்தது. 1958 இல் இருந்து உற்பத்தியில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் இந்தக் காலப் பகுதியில் மீன்பிடித்துறையில் ஏற்பட்ட இயந்திரமயமாக்கம், சிந்தற்றிக் வலைகளின் அறிமுகம், குளிரூட்டல் வசதிகள் அறிமுகம், பல நாட்கலங்கள் அறிமுகம் ஆகியவையேயாகும்.

இந்த அதிகரிப்பானது 1980 ஆண்டு வரை காணப்பட்டது. 1980 களில் மீன் உற்பத்தியானது வீழ்ச்சியடையத் தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்குக் காரணம் 1980 களின் பின் நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை 1990 களில் பெரும் யுத்தமாக வெடித்தது. இதனால், மீன்பிடி உற்பத்தியானது அதிகளவில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. குறிப்பாக வடபகுதி மீன்பிடி உற்பத்தி முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. 2000 ஆம் ஆண்டின் பின் மீன் உற்பத்தியில் சிறிதளவு அதிகரிப்பு உள்ளது. இதற்குக் காரணம் தற்போது நாட்டில் உள்ள யுத்தமற்ற சூழலாகும்.

## எதிர்கால விரிவாக்கம்

நிறைவான கடலக வளங்களைக் கொண்ட இலங்கை எதிர்காலத்தில் கடல் சூழலுக்குப் பாதுகாப்புக்கள் ஏற்படாத வகையிலும் இந்த வளத்தினை உரிய முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு இந்தத் துறையில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி ஒரு தொழில் நுட்பம் சார்ந்த துறையாக வளர்ச்சியடையச் செய்யவேண்டும். இந்த வளம் சார்ந்த பொருளாதாரம் எமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமுடையதாக இருப்பதால், இந்தத் துறை சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவும் இத்துறைசார் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யவேண்டியது எமது நாட்டைப் பொறுத்தவரை மிகவும் அவசியமானதாகும்.

## கடல்வளக் கல்வி

ஒரு நாட்டில் உள்ள வளங்கள் பற்றிய கல்வியே அந்த நாட்டு மக்களுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும். நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப கல்விமுறைகள் தீர்மானிக்கப்படுவதே உலகில் உள்ள வழமையாகும். மேற்குலக நாடுகளின் வளம் சார்ந்த கல்வி மிகவும் சிறப்பான முறையில் காணப்படுகின்றது. இலங்கையில் இத்துறைசார் கல்வி தற்பொழுது க.பொ.த. சாதாரண வகுப்புக்களிலும், ஒருசில பல்கலைக்கழகங்களிலும் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. எமது நாட்டிலுள்ள பிரதான வளம் பற்றிய கல்வி எமது சந்ததியினருக்குச் சென்றடைவது எமது எதிர்கால கடலக துறைசார் பொருளாதார அபிவிருத்திக்கு ஆரோக்கியமானதாக அமையும். ☆

**க.முகுந்தன் (ஆசிரியர்)**
மு/ புதுக்குடியிருப்பு ம.வி.
மு/ வித்தியானந்தாக் கல்லூரி

---

## நாடு எங்கே போகிறது?

சந்தேகம் என்பது தீராத வியாதி. குடும்பங்களுக்குள் கூட சந்தேகம் நுழைந்துவிட்டால், அந்தக் குடும்பம் குட்டிச்சுவராகிவிடும். குடும்பங்களில் தான் இப்படியென்றால் அரசியலிலும் இப்படியோ....?

நோர்வே என்றால் சிங்களப் பேரினவாதிகளுக்கு ஒரு சந்தேகம். இவர்கள் இலங்கைப் பிரச்சினையில் உள்நுழைந்தால், சிங்களவர்களுக்கு ஆபத்து என்ற பேரினவாதிகளின் கூச்சல் சிங்கள மக்களின் வாக்கு வாக்குவங்கி நிரப்புவதற்கு ஒரு பூச்சாண்டி விளையாட்டு.

நோர்வேயில் வெகு விரைவில் ஒரு சர்வதேச மாநாடு நடக்கஇருக்கிறது. இந்த மாநாடு பயங்கரவாதத்திற்கு எதிரானது. எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் 'டிறோண்டி கெய்ம்' என்ற நகரத்தில்தான் இந்த மாநாடு நடைபெறவிருக்கிறது. 46 சர்வதேச நாடுகளும் வேறுபல உலக அமைப்புக்களும் இந்த மாநாட்டில் பங்குபற்றுகின்றன.

இந்த மாநாட்டில் பொதுமக்களை எப்படிப் பாதுகாப்பது, பயங்கரவாதிகளுக்கு எதிராக எப்படிப் போர் புரிவது என்பன பற்றி ஆராயப்படவிருக்கின்றன. பொதுமக்கள் எவரும் இந்த மாநாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை.

இந்த மாநாட்டுக்கு நோர்வேயிடமிருந்து இலங்கைக்கு அழைப்புவிடுக்கப்படவில்லை என்பதை அழாக்குறையாக பத்திரிகையொன்று கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினை என்றாலல்லவா அழைப்பு வந்திருக்கும். பெரும்பான்மை சமூகத்தினைச் சேர்ந்த பேரினவாதிகளுக்கு இதுபுரிவதில்லை. உலகப் பயங்கரவாதத்திற்குள் இலங்கைப் பிரச்சினையை உள்ளிழுத்து தமிழ் மக்களுக்குத் தொல்லைகள் கொடுப்பதற்கு இவர்கள் படாதபாடு படுகிறார்கள். இது நோர்வேக்குப் புரியாதா...?

இதில்தான் சந்தேகம் என்றால், இவைகளிலுமா சந்தேகம்.

ஜப்பான், நோர்வே போன்ற மேற்குலக நாடுகள் மறைமுகமாக உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்றன என்று அந்தப் பத்திரிகை இப்படித் தெரிவித்துள்ளது.

இங்கையின் மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தை அண்டிய பிரதேசத்தில் எண்ணைவள ஆராய்ச்சியில் ஈடுபட நோர்வே நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. 'ரி. பி. எஸ். நோபெக்' என்ற இந்த நிறுவனத்துடன், சுவீடன் நாட்டைச் சேர்ந்த 'பெற்றோஸ்கான்' என்ற நிறுவனமும் இணைந்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபடவுள்ளது.

இந்தப் பேரினவாதப் பத்திரிகை அதனைக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிறுவனங்கள் ஒருபக்கம் இலங்கைக்கு உதவுவதாகக் காட்டிக்கொண்டு பயங்கரவாதத்தின் பக்கம் சாய்கின்றன என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு.

நோர்வேயை இப்படி வம்புக்கு இழுப்பவர்கள் ஜப்பானைச் சும்மா விடுவார்களா?

ஜப்பான் - கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் உள்நுழைந்துள்ளது என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில், இல்மனைற் களிமண் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர் இந்தப் பேரினவாதிகள்.

ஜப்பான் கடந்த வாரம் வவுனியாவில், கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு 751 ஆயிரம் டொலர் நிதியுதவி அளித்துள்ளது. கண்ணிவெடி அகற்றும் விடயத்தில் 'கன்பீல்ட் பிரவன்சன் சென்ரர்' என்ற நிறுவனமே நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இவர்களின் செயற்பாடுகள் படையினருக்கு இடையூறுகளை விளைவிக்கும் என்றும் அந்தப் பத்திரிகை சந்தேகம் தெரிவித்துள்ளது.

இலங்கையை அபிவிருத்தி செய்ய, உதவ முன்வரும் மேற்குலக நாடுகளின் நடவடிக்கைகளிலும் இவர்களுக்கு ஒரு சந்தேகம்.

என்ன செய்வது 'வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்' என்பதே பேரினவாதிகளின் எண்ணமாகுமோ...?

- மகரம்

# அரசாங்கத்தை மீளவும் பேச்சுக்குக்கொண்டுவர சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



**உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையின் முழுவிபரம் வருமாறு**

இலங்கைத் தீவில் அமைதியைக் கொண்டு வருவதிலும் மனிதநேயத்துக்கு சேவையாற்றும் உயரிய நோக்குடனும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் உங்களை எமது மக்கள் சார்பாகவும் எமது தேசியத் தலைவர் சார்பாகவும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதிலும், தமது அன்றாட வாழ்வில் பெரும் வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் அவல வாழ்க்கையை வாழ்ந்துவரும் எமது மக்களின் அவசர மனிதநேயத் தேவைகளை நிறைவுசெய்வதிலும் பெரும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. சிறீலங்காவில் இன்று சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்கக்கூடிய அதிகாரவலுவும் உறுதிப்பாடும்கொண்ட கட்டமைப்பு சிதைந்துபோயுள்ளது.

நாடாளுமன்ற ஆட்சியும், ஜனாதிபதி ஆட்சியும் முரண்பட்டு அதிகார இழுபறிக்குள் தள்ளப்பட்டுள்ளன. இந்நிலைமை போர்நிறுத்த உடன்பாட்டின் நிலவுகைக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

இன்று துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்து சாவுகள் தவிர்க்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாயகத்தில் முகங்கொடுத்த பாரிய, நீண்ட கொடியபோரின் கொடுமைகளிலிருந்து மீண்டு தமது இயல்பான, கௌரவமான வாழ்க்கைக்கு திரும்பமுடியாது தவிக்கின்றனர். இதுவரை ஆறுசுற்றுப் பேச்சுகள் முடிந்துவிட்டன. போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்து இருவருடங்கள் பூர்த்தியாகின்றது. ஆனால் இன்னமும் போர்நிறுத்தத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் எவையும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் எமது மக்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பிச்சென்று குடியேறுவதற்கு தடையாக இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது.

இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லமுடியாதநிலையில், அகதிகளாக அல்லற்படுகின்றனர். மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் போன்ற உடனடி மனிதாபிமானத் தேவைகள் நிறைவுசெய்யப்படவில்லை. சமாதானத்தின் பலாபலன்கள் எதுவும் மக்களுக்கு சென்றடையாத நிலையில் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை யிழந்து வருகின்றனர். மக்களின் அன்றாட வாழ்வாதாரப்பிரச்சினைகள் மோசமடைந்து செல்கின்றன.

இத்தீவில் நீதியானதும் இறுதியானதுமான அமைதித் தீர்வைக் காண்பதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்பதையும், அதுவரை எமது மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளை பிற்போடமுடியாது என்பதையும் உணர்ந்தே இருதரப்பும் பேச்சுகளில் 'சிரான்' என்ற உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான உபகுழுவினை அமைப்பதற்கு இணங்கியிருந்தன என்பதனை நீங்கள் அறிவீர்கள்.

இடம்பெயர்ந்த எமது மக்களை மீளக் குடியமர்த்தி, போரால் அழிவுற்ற கட்டுமானங்களை மீளமைக்கும், அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பதற்கான அதிகாரவலுவற்ற ஓர் அமைப்பாகவே, இக்கட்டமைப்பு இருந்தமை கடந்தகால அதன் செயற்பாடுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

உருப்படியான நிர்வாக அதிகாரங்கள் இல்லாமல், போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பாரிய திட்டங்களை முன்னெடுக்கமுடியாது என்பதற்கு சிரான் ஓர் சிறந்த படிப்பினையாக உள்ளது. சிரானின் செயற்பாட்டின் ஆரம்பகட்டங்களில் கூட்டு மனுக்களையும், திட்டங்களையும் தயாரித்து சர்வதேச சமூகத்திடம் முன்வைப்பதில் நாம் சிறீலங்கா அரசாங்கத்துக்கு எமது பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தோம்.

இயல்புநிலையை மீளக்கொண்டுவந்து போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச உதவிகளைப் பெறும் நோக்கில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டோம். நாம் எமது நல்லெண்ணத்தைக் காட்டும்முகமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டபோதும், சர்வதேச உதவிகளைப் பெறுவதில் எம்மை ஓரங்கட்டும் போக்கையே அரசாங்கம் கையாண்டது.

சமாதானப் பேச்சுகளை சர்வதேச உதவிக்கான ஓர் கவர்ச்சிப் பொருளாகவே அரசாங்கம் காட்டமுயன்றது. அத்துடன் சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச உதவிகளைப் பெறுவதற்காக முழுநாட்டையும் பாதிக்கும் பொது அம்சமாக வறுமையை முன்வைத்து, சிறீலங்காவை மீளப்பெறுதல் என்ற ஆவணத்தை தயாரித்தது.

இவ ஆவணத்தில் வறுமை ஒழிப்பு தொடர்பாக வடக்கு - கிழக்கு பகுதிகளை நாட்டின் ஏனையபகுதிகளுடன் சேர்த்து, சமச்சீராக காட்டமுனைந்தமை வடக்கு - கிழக்கு மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது.

அத்துடன் இவ் ஆவணம் வடக்கு கிழக்குக்கான எதுவித இனங்காணப்பட்ட இலக்குகளையும் கொண்டிருக்கவுமில்லை. இரு தசாப்த காலப் போரினால் அழிக்கப்பட்ட ஒரு பிராந்தியம் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் சமப்படுத்திக் காட்டப்படுவது நீதியானது அல்ல.

இவ்வாறானதோர் புறநிலையிலேயே போர்நிறுத்த உடன்படிக்கையின் முழுமையான அமுலாக்கத்தை வேண்டியும், பேச்சுகளில் எட்டப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றக் கோரியும் தற்காலிகமாக நாம் பேச்சுகளிலிருந்து விலகியிருந்தோம். இவ்வாறானதோர் புறநிலையில் சிரானின் செயலிழப்பும், அதன் கசப்பான அனுபவங்களின் மத்தியிலும் நீண்டகாலப் போரினால் அழிந்துபோன எமது தேசத்தையும், எமது மக்களின் வாழ்க்கையையும் மீளக்கட்டியமைத்து இயல்பு நிலையைக் கொண்டுவர உருப்படியான நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட காத்திரமானதோர் இடைக்கால கட்டமைப்பின் தேவையை நாம் உணர்ந்தோம்.

இவ்வாறானதோர் இடைக்கால கட்டமைப்பின் அவசியம் குறித்து எமது தலைவர் கடந்த வருடம் மே மாதம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. பீற்றர்சனுக்கு விளக்கியிருந்தார். எமது வேண்டுகோளுக்கிணங்க அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்துக்கான பிரேரணைகளை முன்வைத்தது. அடுத்தடுத்து முன்வைக்கப்பட்ட இரு பிரேரணைகளும் உருப்படியான அதிகாரங்கள் எதனையும் கொண்டிருக்காததனால் எம்மால் நிராகரிக்கப்பட்டன.

மூன்றாவதாக அரசாங்கம் முன்வைத்த வரைவு குறித்தும் நாம் அதிருப்தியடைந்தோம். இந்நிலையிலேயே நாம் சர்வதேச, உள்நாட்டு அறிஞர்களினதும், எமது மக்களுடனுமான விரிவான, ஆழமானதோர் கலந்தாலோசனைகளின் பின்னர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபு எம்மால் முன்வைக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தில் போரினால் சிதைந்து போயுள்ள எமது மக்களின் வாழ்நிலையை மேம்படுத்தவும் இயல்பு நிலையை ஏற்படுத்தி இறுதியானதோர் அரசியற் தீர்வுக்கு அழைத்துச் செல்லும் முன்னகர்வாகவுமே எமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைந்தது.

இப்பிரேரணைகள் கையளிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு இவ்விடயம் தொடர்பாக பேசுவதற்கு தயாராக உள்ளதனை நாம் தெரிவித்திருந்தோம். நாம் எமது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவினைக் கையளித்து குறுகிய காலப்பகுதியில் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறிக்கொண்டு சிறீலங்கா ஜனாதிபதியால் மூன்று அமைச்சுப் பதவிகளும் பறிக்கப்பட்டமை பெரும் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்தது.

இம்மூன்று அமைச்சுப் பதவிகளும் போர்நிறுத்த உடன்பாட்டின் நிலவுகையை பேணுவதற்கு மிகவும் அவசியமானவை. இந் நெருக்கடியால் போர்நிறுத்த உடன்படிக்கையை அமுலாக்குவதிலும், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதிலும் பெரும் இடையூறுகள் தோன்றியுள்ளன.

ஏற்கனவே போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததனால் மக்கள் பெரும் இன்னல்களை சந்தித்துள்ளனர். மக்களின் வாழ்விடங்கள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழேயே உள்ளன. இந்நிலையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி அவலமான வாழ்வுக்கு தள்ளப்பட்டுள்ள மக்களின் அவசரமான மனிதநேய பிரச்சினைகளை தீர்ப்பதில் மேலும் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது. இன்று தென்னிலங்கையில் மக்கள் சமாதானத்தின் பலாபலன்களை அனுபவித்துவருகின்றனர். ஆனால், இரு தசாப்தகால கொடியபோரின் சுமைகளைத் தாங்கிவந்த மக்கள் பொறுமையிழந்து விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சமாதான முயற்சிகள் குறித்த மக்களின் எதிர்பார்ப்புகள் நலிவடைந்து வருகின்றன.

கடந்த இருவருடங்களாக நாம் இராணுவத்தின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் மத்தியிலும பொறுமையுடனும், பற்றுறுதியுடனும் போர்நிறுத்த உடன்பாட்டைப் பேணிவருகிறோம்.

ஆனால், கடந்த இருதசாப்தங்களாக போர் ஏற்படுத்தியுள்ள ஆழமான வடுக்களை சுமந்து கொண்டு நெருக்கடியுள் வாழ்ந்துவரும் எமது மக்கள் பொறுமையிழக்கும் நிலைக்கு வரும்போது நாம் அவர்களின் உணர்வுகளுக்கு பதிலளிப்பதற்கான தார்மீக கடமைப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்.

இன்று அமைதி முயற்சிகள் சிறீலங்கா அரசாங்கத்தின் கரங்களிலேயே தங்கியுள்ளது. சமாதான முயற்சிகளை உறுதிப்பாட்டுடன் முன்னெடுப்பதற்கான பூரண அதிகாரமும் சமாதானத்துக்கான மக்களாணையும் கொண்ட சிறீலங்காவின் தலைமையுடன் நாம் பேசுவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால், அரசியல் முறுகல் நிலை இழுபட்டுச் செல்வதும் எமது மக்களின் அவசர மனிதாபிமான பிரச்சினைகள் தீர்க்கப்படாது தொடருவதும் எதிர்காலத்தில் அமைதி முயற்சிகளைத் தொடருவதற்கான ஆரோக்கியமான புறநிலைகளைத் தோற்றுவிக்கப்போவதில்லை.

இவ்வாறானதோர் சூழலில், சிறீலங்கா அரசாங்கத்தை மீளவும் அமைதி முயற்சிகளுக்கு கொண்டுவரும் வல்லமையும் ஆற்றலும் சர்வதேச சமூகத்துக்கே உண்டு. சமாதான முயற்சிகளில் ஏற்படும் முன்னேற்றத்தினடிப்படையில், சர்வதேச சமூகத்தால் சிறீலங்காவுக்கு உதவியளிக்கப்பட்டுள்ள நிதியானது சமாதானத்தில் ஏற்படும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நன்கொடையாளர் சமூகம் இவ்வுதவியை சமாதானத்தில் ஏற்படும முன்னேற்றங்களைப் பொறுத்து வழங்குவதற்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலமாக சிறீலங்கா அரசினை மீளவும் பேச்சுகளுக்கு கொண்டுவரமுயலவேண்டும்.

மனிதநேய பிரச்சினைகளுக்கு தொடர்ந்து முகங்கொடுத்தவாறு இன்றும் வாழ்நிலையில் எதுவித முன்னேற்றங்களுமின்றி வாழும் வடக்கு - கிழக்கு மக்கள் நம்பிக்கையிழந்து, விரக்தி நிலைக்கு தள்ளப்படுவதை தடுப்பதற்கான கடமைப்பாடும் சர்வதேச சமூகத்தையே சாரும். இன்று தமிழர் தேசம் கொண்டிருக்கும் ஒரேயொரு நம்பிக்கை நீங்கள்தான்.

சர்வதேச சமூகத்தின் பிரசன்னமே நீதியான ஓர் முடிவு குறித்து மக்களை நம்பிக்கை கொளளவைத்துள்ளது. இன்று சமாதான பேச்சுகள் ஆரம்பமாகி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து பேச்சுகளை மேற்கொண்டு, முடிவுகள் எட்டப்படுவதற்கு கூட காலதாமதமாகி வருகிறது.

இந்நிலையில் மக்களின் வாழ்நிலையோ மோசமான கட்டத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. மக்களின் இவ்வாழ்க்கைப் பிரச்சினைகள் அவசரமானவை. அத்தியாவசிய மனிதாபிமானத் தேவைகள் ஒருபுறமும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்றவை மறுபுறமுமாக எமது மக்கள் எதிர்கொள்ளும் பாரிய மனிதநேய பிரச்சினைகள் உடனடியாக பரிகாரம் காணப்படவேண்டியவை.

மக்களின் பங்களிப்புடன் இறுதித்தீர்வை நோக்கிய சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இது மிகவும் இன்றியமையாதது. இதற்கு பொருத்தமான வழிமுறைகளுடாக உங்களின் உதவிகளை வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்பார்த்துநிற்கின்றனர்.

உலகில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் அவசர மனிதநேய தேவைகளை எதிர்கொள்வதற்கு பொருத்தமான வழிமுறைகள் கடந்தகாலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளமைக்கு முன்னுதாரணங்கள் உள்ளன. இம்மனிதநேய உதவிகள் அங்குள்ள சிவில் அமைப்புகளுடாகவும் (**Civilian Based Organizations-CBOs**) வெளிநாட்டு, உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் உள்ளூர் மக்களின் பங்குபற்றுதலுடன் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் போர்நடைபெற்ற காலத்திலும் கூட ஐ.நா அமைப்புகள் மற்றும் பிற சர்வதேச மனிதநேய அமைப்புகள் உள்ளூர் சிவில் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து மனிதநேய உதவிகளை வழங்கியிருந்தன என்பதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

இனறு இதற்கான ஓர் உதாரணமாக சிவில் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து சர்வதேச ரீதியாக நிதியுதவியளிக்கப்படும் மனிதநேய கண்ணிவெடியகற்றல் திட்டத்தைக் குறிப்பிடலாம். இத்திட்டத்தின் வெற்றியானது நிச்சயமாக எமக்கு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் தொடர்பான திட்டங்களை வகுத்து செயற்படுவதற்கு வழிகாட்டமுடியும்.

ஏற்கனவே தமிழர் தாயகத்தில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மிகக் குறைவான வளங்களுடன் மக்களின் பெரும் ஆதரவுடனும் பங்களிப்புடனும் - சட்டம் ஒழுங்கைப் பேணி, நிர்வாக ஒழுங்கமைப்புகளை நடாத்திவருகிறோம். மேலும் பொருண்மியம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் அடிப்படை நிர்வாகக் கட்டமைப்புகள் செயற்திறனுடன் இயங்கிவருகின்றன.

இவற்றுடன் உள்ளூர் மக்களின் பங்குபற்றுதலுடன் இங்கு செயற்படும் சர்வதேச, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் சிறப்பாக சேவையாற்றிவருகின்றனர். இவ்வாறான சர்வதேச, உள்நாட்டு அரசசார்பற்ற அமைப்புகளுடாகவும் உள்ளூர் சிவில் அமைப்புகளுடன் இணைந்தும் மக்களின் பங்குபற்றுதலுடன் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கு உங்களின் உதவிகள் தொடரப்படுவதையே நாமும் வடக்கு - கிழக்கு மக்களும் எதிர்பார்க்கின்றோம். இதன்மூலம் மக்களின் அவசர மனிதாபிமான பிரச்சினைகளை துரிதமாகவும், செயற்திறனுடனும் நிறைவு செய்து மக்களை சமாதான முன்னெடுப்பில் நம்பிக்கையுடன் பங்குபற்றச்செய்யமுடியும்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தில் திட்டமிடல் செயற்பாடுகளையும், அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் இல்லாமல் இருந்தமை ஒரு பாரிய குறைபாடாக இருந்தது.

இக்குறையை நீக்கி, தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக அவர்களின் எதிர்காலம் குறித்த தூரநோக்குடன் இன்று நாம் அமைத்திருக்கும் அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான செயலகமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான ஓர் செயலகமாக செயற்படும். வடக்கு-கிழக்கில் இன்றும் கடந்த காலங்களிலும் பல்வேறு தொண்டர் அமைப்புகள் தேவை மதிப்பீடுகள், திட்டவரைவுகள் போன்றவற்றை மேற்கொண்டுள்ளன.

ஒரே நேரத்தில், ஒரேவிடயம் குறித்து வேறுபாடான புள்ளிவிபரங்கள் தகவல்கள் காணப்படுவதால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும்போது ஏற்படக்கூடிய குழப்ப நிலைகளைத் தவிர்த்து, ஏனையோரின் கடுமையான முயற்சிகளுடான பெறுபேறுகளையும் உள்வாங்கி சிறப்பான முறையில் எதிர்கால அபிவித்திப்பணிகளை தமிழர் தாயகத்தில் முன்னெடுத்து திட்டமிடல், அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் ஓர் வழிகாட்டும் அமைப்பாக இது செயற்படும்.

தேசக்கட்டுமானத்தை நோக்கிய அபிவிருத்திப் பணிகளுக்கான இலக்குகளை இணங்கண்டு, உள்நாட்டு சர்வதேச நிபுணத்துவ உதவிகளுடன் தமிழர் தாயகம் தொடர்பான திட்ட வரைவுகள், தகவற்திரட்டுகள் தயாரிக்கப்படவுள்ளன. இவை வடக்கு - கிழக்குக்கான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மண பணிகளை எதிர்காலத்தில் செயற்திறனுடனும், துரிதமாகவும் மேற்கொள்வதற்கு உதவியாக அமையும். இத்துடன் எமது தாயக அபிவிருத்திக்கான மூலோபாயங்களை வரைவதிலும் கொள்கைத்திட்டங்களை மேற்கொள்வதிலும் சிரத்தை எடுக்கும். விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வமான அபிவிருத்தி தொடர்பான நிலைப்பாடு, இச்செயலகத்தினூடாகவே வெளிவரும். இப்பணியில் புலம்பெயர்ந்துவாழும் தமிழ்மக்களின் துறைசார் நிபுணத்துவ உதவிகளையும் ஒருங்கிணைத்து இச்செயலகம் செயற்படும்.

இத்துடன் எனது நன்றிகளைக் கூறி எனது கருத்துகளை நிறைவுசெய்வதுடன் வெளிப்படையான உங்கள் கருத்துகளை அறிவதற்கு ஆவலாக காத்திருக்கிறோம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திலங்க சுமதிபாலவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் இருக்கும் போது, அவருக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்க ஏற்பாடுசெய்யுமாறு, மேலதிக நீதிவான் மேலும் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத்துறை சமர்ப்பித்துள்ள அறிக்கையும், குற்றச்சாட்டுகளும் சட்டத்துக்கு முரணானது என திலங்க சுமதிபால சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதிட்டபோதிலும், நீதிவான் அதனை நிராகரித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால், பிணைவழங்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று மேலதிக நீதிவான் தெரிவித்தார்.

சட்டத்தரணிகளின் வேண்டுகோளுக்கிணங்க திலங்க சுமதிபாலவை அம்புலன்ஸ் வண்டி மூலம் அழைத்துச் சென்று சக்கர நாற்காலி உதவியுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு நீதிவான் அனுமதி அளித்திருந்தார்.

1999 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியைப் பார்ப்பதற்கு காலஞ்சென்ற தம்மிக அமரசிங்க என்ற நபருக்கு போலிக் கடவுச்சீட்டு ஒன்றைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்று திலங்க சுமதிபாலா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதேவேளை - திலங்க சுமதிபால நேற்றுமாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# யாழ்.பல்கலை வணிகபீடத்துக்கு மேலும் 19 மாணவர்கள் அனுமதி!

## மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வணிகபீடத்துக்கு மேலும் 19 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைககுழு நேற்று அறிவித்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

யு.உதயரமேஸ் (தாளையடி), பி.பிரதீப்காந் (திருநெல்வேலி), என்.கஜேந்தினி (ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்), என்.மாணிக்கம் (கைதடி கிழக்கு), என்.ரட்ணசிங்கம் (ஊர்காவற்துறை), கே.தர்மித் (நல்லூர்), எவ்.எக்ஸ்.பிரதீப் (கொழும்புத்துறை), எஸ்.திவாகரன் (கொடிகாமம்), ஆர்.பிரகாஸ் (அளவெட்டி), ரி.சுரேகா (அல்வாய்), எம்.அப்பையா (அளவெட்டி), எஸ்.லக்ஸ்மன் (உரும்பிராய்), ரி.பிரியதர்சினி (அச்சுவேலி), எஸ்.நிமாலி (பருத்தித்துறை), என்.சந்திரகுமார் (மயிலிட்டி), எஸ்.திபேஸ்வரன் (மன்னார்), கே.பி.பெர்ணாண்டோ (மன்னார்), எஸ்.சி.சந்தியோகு (அடம்பன்), பி.டினேஸ்குமார் (மடு) ஆகியோரே மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட 19 பேர் ஆவர். இவர்கள் அனைவரும் எதிர்வரும் 21 ஆம் திகதிமுதல் யாழ்.பல்கலைக்கழக பதிவாளரிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ப)

## நீர் முகாமைத்துவ சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு!

நீர் முகாமைத்துவ சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனை எதிர்த்துள்ள நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊழியர்கள் நாடாளுமன்றத்திற்கு வெளியே மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நீர் முகாமைத்துவம் உலக வங்கியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மறியற் போராட்டம் காரணமாக கொழும்பு மாநகரில் நீர் விநியோகம் தடைப்படுமென எதிர்பார்க்கின்றபோதிலும் நீர் வடிகால் அமைப்பு சபை இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. ஆனால் நாட்டின் வரட்சி காரணமாக இரண்டு தினங்கள் 4 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (01)



கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்புக்காக வந்த வெளிநாட்டுப் பிரதிநிதியை புலித்தேவன் வரவேற்கிறார்.

# சம்பள முரண்பாட்டை நீக்குமாறு சுகாதார ஊழியர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி, சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளது.

நேற்றையதினம் சுகாதார அமைச்சுக்கு முன்னால் இந்தப் போராட்டம் ஆரம்பமானது. இதன் காரணமாக சிறிது நேரம் அவ்விடத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது.

தமதுகோரிக்கைகளுக்கு தகுந்த பதில் கிடைக்காவிடடால் தொடர்ச்சியாக இந்தப் போராட்டம் நடைபெறும் என்றும், நாம் இனிமேலும், எமது போராட்டத்தினை அமைதியான முறையில் கடைப்பிடிக்கமுடியாது என போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோசங்களை எழுப்பினர்.

சுகாதார சேவையை பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பு எமக்கிருப்பதால் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாது, உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்கின்றோம். சுகாதார அமைச்சுக்கு முன்னால் நடைபெற்ற போராட்டம் பொலிசாரின் நடவடிக்கை காரணமாக சுகாதார அமைச்சுக்குள் நடைபெற்றது.

இந்த விடயம் குறித்து, சுகாதார அமைச்சர் தயாரட்ன கருத்து தெரிவிக்கையில் -

சுகாதார தொழிற்ச்சங்க கூட்டமைபபுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, தேவையான விபரங்களை நாம் கூட்டமைப்பு அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளோம்.

அததுடன், கூட்டமைப்புக் கோரிக்கைக்கு தகுந்த பதில் அளிக்கத் தயராகிவரும் நிலையில், தொழிற்சங்கக் கூட்டமைப்பு முறைக்கு முரணான செயற்பாட்டில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (01)

## படகில் சென்ற மூவரைக் காணவில்லை

(நுவரெலியா)

நுவரெலியா போஷரல்ல நீர்த்தேக்கத்தில் படகொன்றில் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் இருவரும், யுவதி ஒருவரும் காணாமற்போயுள்ளனர்.

மூன்று இளைஞர்களும், மூன்று யுவதிகளும் நேற்றுக்காலை நீர்த்தேக்கத்தில் படகில் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் சென்ற படகு கவிழ்ந்ததில் இரண்டு இளைஞர்களும், யுவதி ஒருவரும் உயிர்தப்பினர் என்றும், ஏனையோர் காணாமற்டோயுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## போர் தவிர்க்க முடியாதது என்றாலே புலிகள் மீள போருக்குத் திரும்புவர்!

### வீடமைப்பு பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத்

(கொழும்பு)

மீண்டும் போர் ஒன்று அவசியமானதென்று கருதப்பட்டால் மட்டுமே, தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்குத் தயாராவார்கள். அதுவரையும் பொறுமையாகச் செயற்படுவார்கள் என வீடமைப்புத்துறை பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத் தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது -

சமாதானம் நோக்கிய பயணத்தில் சென்றுகொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் சமாதானம் சரிவராது என்ற நிலை வரும் போது மட்டுமே போருக்கான ஆயத்தத்தை மேற்கொள்வர்.

இதுவரை ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தங்கள் குறுகிய ஆயுளையே கொண்டிருந்தன. ஆயினும்; பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரண்டு வருட காலமாக நீடித்துவருகின்றது.

இதற்குக் காரணம் சமாதானத்தின்பால் சர்வதேசமும், மக்களும் கொணடுள்ள ஆர்வமேயாகும். எனவே, சமாதான முயற்சிகளை மேற்கொள்வதில் அனைத்துத் தரப்பும் முன்வர வேண்டும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (01)

# புலிகளுக்கு நேரடியாக உதவி; ஐரோப்பிய சமூகம் தயாராகிறது!

## சிஹல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நேரடியாக உதவிகளை வழங்குவதற்கு ஐரோப்பிய சமூ கம் தயாராகி, வருவதாகவும் நேரடியாக அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஊடாகவோ வழங்கப்படும் இந்த உதவிகள் விடுதலைபபுலிகளை இராணுவ ரீதியாக மேலும் பலப்படுத்தும் என்று சிஹல உறுமய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபபடடுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வடக்கு - கிழக்கை அபிவிருத்திசெய்யவதற்காக விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள திட்டம் அந்த இயக்கத்தின் இராணுவ ஏகபோகத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

மிகவும் தந்திரமாக இராணுவ முகாம்கள், விநியோகப்பாதைகள் என்பவற்றை தமது வசமாக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

ஐரோப்பிய சமூகம் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக உதவி செய்வதன்மூலம் அந்த இயக்கத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதற்கு வழிவகுப்பதாகவும் இருக்கும்.

எனவே, அரசியல் பேதங்களை மறந்து இந்தச் சதித்திட்டத்தை தோற்கடிக்க முன்வருமாறு ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பதாக சிஹல உறுமய மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கு...

தெரிவிப்பதாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்க ஊடகம் ஒன்று தெரிவித்தது.

## ஜனாதிபதி...

முறுகல்நிலை ஏற்பட்டது. இந்த முறுகல் நிலையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தையே இன்று நடைபெறவுள்ளது. (01)

## இந்திய...

இதனையடுத்து, அச்சடைந்த உள்ளூர் மீனவர்கள் மீன்பிடி வலைகளுடன் கரைதிரும்பியதாக வடமராட்சி வடக்கு மீன்பிடி சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய மீனவர்களால் தமது மீன்பிடி வலைகள் அபகரிக்கப்பட்டோ அல்லது சேதமாக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் காரணமாகவே தாம் உடன் கரை திரும்பியதாக உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர். (202)

## 51 ஆவது....

யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை - 51 ஆவது டிவிஷனின் பொதுக்கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் ரி.ரி.ஆர்.சில்வா, மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டு, யாழ். குடாநாட்டுப் படைகளுக்கான பிரிவுக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# நாடு திரும்பும் சோமவன்ச கைதுசெய்யப்பட வேண்டும்!

## அமைச்சர் ராஜித சேனாரத்ன

இலங்கைக்கு வருகைதரவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்சவை கைது செய்து விசாரிப்பதன்மூலம் விஜயகுமாரதுங்கவின் கொலை தொடர்பான மர்மம் புலப்படும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தனியார் தொலைக்காட்சிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் கணவரான விஜயகுமாரதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் இலங்கை வரும் சோமவன்ச அமரசிங்கவைக் கைதுசெய்து விசாரிக்கவேண்டும்.

குறிப்பாக ஏனையோரின் கொலை தொடர்பான விசாரணைகள் செய்யாதுவிடினும் ஜனாதிபதியின் கணவரின் படுகொலை காரணமாக அவரை விசாரணைசெய்து உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளவேண்டியது ஜனாதிபதியின் கடமை. சோமவன்சவை கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்துவதன்மூலம் தனது நெருங்கிய நண்பரான விஜயகுமாரதுங்கவின் கொலை தொடர்பாக பல தகவல்கள் வெளிவரும் என்றும் தெரிவித்தார்.

# மட்டு.பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்யலாம்

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங் களில் முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புவோர் - அவற்றை தாய் மொழியிலேயே பதிவு செய்யலாம் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மொழி தெரிந்த அதிகாரிகளின் பற்றாக்குறை தொடர்பாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட அமைப்புகள் முன்வந்திருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகர தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் எந்த ஒரு பொலிஸ் நிலையத்திலும் தமிழ் மொழியில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு மறுக்கப்படுமானால், அதுகுறித்து தமது கவனத்துக்கு கொண்டு வருமாறும் அவர் தெரிவித்தார்.

# இந்தியாவுடன் பாதுகாப்பு...

உதவியுடன் புனரமைப்பது தொடர்பாக பிரத்தியேகமாகவும் ஆராயப்பட்டதாக லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார். இது தொடர்பாக இந்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், இருநாட்டுப் பிரதிநிதிகளும் இரு நாடுகளுக்குமிடையிலான பிராந்தியப் பாதுகாப்பு, பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுதல் என்பன தொடர்பாகப் பேசப்பட்டது.

அத்துடன், இலங்கைப் பிரதிநிதிகள் இந்தியாவிடமிருந்து ஹெலிகொப்ரர்கள், சிறிய போக்குவரத்து விமானங்கள் மற்றும் பாரிய கடற்கலங்கள், ஆயுத தளபாடங்கள் என்பவற்றை வாங்குவதற்கான விருப்பத்தை வெளியிட்டனர். கடந்த 14 ஆம் திகதி மூன்றுநாள் விஜயமாக பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத் தலைமையில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் அரச சட்டத்தரணி நிஹால் ஹட்ரிச் ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இந்தியப் பாதுகாப்பு செயலர் அஜய் பிரசாத் மற்றும் முக்கிய படைத்துறையைச் சார்ந்தவர்களையும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசையும் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தங்கள் குறித்தும் ஆராயப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.